


# 31st DAY SOUVENIR
## (THAVAJOTHY)
**In Memory of TELLIPPALAI EAST**

**LATE Mrs. THAVAMANY SUNDARARAJAH.**

**அமரர் திருமதி. தவமணி சுந்தரராஜா.**

அவர்களின்

# நினைவுச் சுடர்
## (தவஜோதி)
**2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பாலும், உயிர்ந்த பண்பாலும், எம்மையும்,
எமது குடும்பத்தவரையும் உற்றார்,
உறவினர்களையும் நன்கு வாழ வைத்து,
உயர்ந்த ஒரு வழி காட்டியாக வையத்துள் வாழ்ந்து
அமரராகி, என்றென்றும் எமது நினைவில் நீங்காது
நின்ற விட்ட எம் அருமைத்தெய்வமான தூய நல்
ஆத்மா இறைவனின் திருமென் மலர்ப்பாதங்களில்
நிலையான நித்திய ஆத்மா சாந்தி பெறப்
பிரார்த்தித்து, இவ் நினைவுச் சுடரை அவர் தம்
பாதங்களில் எம் கண்ணீர் நிறைந்த
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாபாவின் பாதார விந்தங்கள்

யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டியில் பிறந்து, தெல்லிப்பழையில் வாழ்ந்து நியூசிலாந்தில் அமரத்துவம் அடைந்த தண்டிகைக் கனகராயர் முதலிவழி அமரர் வேலுப்பிள்ளை முருகேசபிள்ளை, அம்பலவாண முதலி வழி சிதம்பரம் முருகேசபிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வியும்,

திரு.நாகலிங்கம் சுந்தரராஜாவின் அன்பு மனைவியுமான

திருமதி.தவமணி சுந்தரராஜா

அவர்களின்

# நினைவுச் சுடர்

# தவஜோதி

## 09.09.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அன்னைமடியில்
07.07.1932

இறைவனடியில்
10.08.2009

# அமரர் திருமதி. தவமணி சுந்தரராஜா

(உயிரியல் பட்டதாரி ஆசிரியை (Biology (B.Sc) Teacher)

## திதி வெண்பா

ஓர் கலியுக விரோதி வருட ஆடித்திங்கள் தன் அபரபக்கச்
சீர்வளர் ஐங்கரனுக்குரிய சங்கடஹர சதுர்த்தி - திதி அதனில்
பார்புகழ் வாழ்ந்த தவமணி என்னும் நல் மடந்தை விக்கினங்கள்
தீர்ந்து விநாயகன் தன் பாதாரவிந்தங்கள் சென்றமைந்தார் நயந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தவமணி சுந்தரராஜாவின் வாழ்வும், வளனும்

நீர்வளம், நிலவளம், கலைவளம் செறிந்து சைவமும் தமிழும் செழித்து வளரும் யாழ்ப்பாண நகரத்தின் வடபாலுள்ள கொல்லங்கலட்டி என்னுங் குக்கிராமத்தில், சைவவேளாண் குலத்தினரும், தண்டிகைக் கனகராய முதலி வழித்தோன்றலும் நில அளவை மேற்பார்வையாளருமாகிய அமரர் முருகேசபிள்ளை அவர்களுக்கும் அம்பலவாண முதலி வழிவந்த சிதம்பரம் என்னும் மங்கை நல்லாளுக்கும் 1932ம் ஆண்டு ஆடித்திங்கள் ஏழாந்திகதி அமரர் தவமணி அவர்கள் அவதரித்தார். அவரே குடும்பத்தின் தலைமகள். அவரின் பின் பிறந்தவர்கள் நான்கு பெண் சகோதரிகளும், ஐந்து ஆண் சகோதரர்களுமாவார். குடும்பத்தில் முதல் தோன்றிய செல்லப் பிள்ளையாதலால் எல்லோராலும் "பேபி" என்று செல்லமாக அழைத்து வளர்க்கப்பட்டு வந்தார். தந்தையாரின் சகோதரி அவர்கள் கூடவே வாழ்ந்து வந்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லாமையால் தம் அன்பு முழுவதையுஞ் சொரிந்து அவரை கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தார்.

கல்விக்குரிய பருவம் வந்ததும், தம் வீட்டிற்கு அருகாமையில் இருந்த கொல்லங்கலட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்ப வகுப்பில் சேர்ந்து கல்வி கற்றார். சிறிது காலத்தின் பின் குடும்பம் தெல்லிப்பழைக்கு இடம்பெயர்ந்து சென்றது. அதனால் மகாஜனாக் கல்லூரியில் தன் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்தார். அதன் பின் தன் இடைநிலைக் கல்வியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கற்றார். சிறுவயது முதல் கல்வியில் மிகுந்த ஆர்வமும், திறமையும் உடையவராய் மிளிர்ந்தமையால் அதிபர், ஆசிரியர்கள் யாவரினதும் பாசத்திற்கும், பாராட்டிற்கும் உரியவரானார். சிரேஷ்ட தராதரப் பத்திர (S.S.C) பரீட்சையில் சித்தி எய்தியதும், அவரைக் கற்பித்த விஞ்ஞான ஆசிரியரின் தூண்டுதலால் தந்தையார் அவரை மேற்கல்விக்காக இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். முதல் இரண்டு ஆண்டுகளும் திருச்சியில் புனித சிலுவைக் கல்லூரியிலும் (Holy Cross College), பின்னர் இறுதி இரண்டு ஆண்டுகளை சென்னை தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்று விஞ்ஞான பட்டதாரி (B.sc) ஆனார். இலங்கைக்குத் திரும்பி வந்தபோது அவரின் ஆற்றலை அறிந்திருந்த மகாஜனாக் கல்லூரி அதிபர் அவருக்குத் தம் கல்லூரியிலேயே சேவையை வழங்கினார். 1954ல் முதலில் தற்காலிகமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955 ஆம் ஆண்டு ஆனி முதல் நிரந்தர ஆசிரியராகவும் பணியாற்றினார். அவருடைய சேவையின் பயனாக வெளியேறிய மாணவர்கள் இன்று மருத்துவர்களாக, உயர் உத்தியோகம் வகிப்பவர்களாக உலகெங்கும் காணப்படுகின்றனர். 1955ம்ஆண்டு தொடக்கம் 1975ம் ஆண்டு இறுதிவரை மகாஜனக் கல்லூரியில் அவர் ஆற்றிய சேவை என்றும் நினைவில் இருப்பதற்குரியவை. 1975ம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்று ஆபிரிக்க நாடுகளான சாம்பியா, போபொதற்ஸ்வானா ஆகிய நாடுகளில் பணி புரிந்து இளைப்பாறினார்.

இல்லறமாம் நல்லறத்தில் ஈடுபடுத்த விரும்பிய பெற்றோர்கள், 1960 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைச் சங்கரத்தையைச் சேர்ந்த நாகலிங்கம் இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திரு.சுந்தரராஜா அவர்களை மணம்புரிந்து வைத்தனர். அவரும் கணித, விஞ்ஞான பட்டதாரி யாவார். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கணித பாடம் கற்பித்து வந்தவர். திருமணத்தின் பின் மாற்றம் பெற்று மகாஜனாக் கல்லூரியிலேயே கணித பாட ஆசிரியராகக் கடமையாற்றினார்.

''மங்கலம் என்பது மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட் பேறு.''

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க இறையருளால் இரேணுகா என்ற பெண் மகவையும், முருகானுஜன் என்ற ஆண்மகனையும் பெற்றெடுத்தனர். பாசத்தையும் நேசத்தையும் தம் குழந்தைச் செல்வங்கள் மீது அள்ளிச் சொரிந்த அதேவேளை அவர்களுக்குச் சிறந்த கல்வியறிவையூட்டி, மனிதப் பண்புகள் மிளிரவும் வளர்த்து வந்தனர்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்''

என்ற வள்ளுவர் வாக்கின் படி பிள்ளைகள் அருங்குணசீலர்களாகவும், அறிவாற்றல் உள்ளவர்களாகவும் மிளிர்ந்து சீரிய குணமும் சிறப்புக் கல்வியும் பெற்று அவர் தம் தகுதியைக் குன்றின் மேலிட்ட தீபம் போல் விளக்கியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் சம்பியா சென்ற போது சிறுவர்களாக இருந்த பிள்ளைகளையும் தம் கூட அழைத்துச் சென்று உரிய கல்வியை அவர்கள் பெற வழி செய்தனர். மகள் இரேணுகா இந்தியாவில் உயர்கல்வி பெற்று விஞ்ஞான பட்டதாரி ஆகி மீள வந்து கணக்காளர் பாடநெறியைப் படித்துப் பரீட்சையிலுந் தேறி கணக்காளர் பட்டம் பெற்றார். மகன் முருகானுஜன் உயர் கல்விக்காக அமெரிக்கா சென்று பொறியியலாளராகப் பட்டம் பெற்று, கணினியும் கற்று சிறந்த பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார். உரிய காலத்தில் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துப் பேரப்பிள்ளைகளையும் காணும் பாக்கியம் பெற்றார். ஶ்ரீகுமார், அனுசியா ஆகியோரை அவரின் மருமக்களாக்கினார். அவர்களும் உயர்ந்த கல்வியுஞ் சீரிய ஒழுக்கமும் உடையவராய், மக்களின் தகுதிக்கேற்ற தகமையுடையவர்களாகத் திகழ்கின்றனர். மருமக்களையும் மக்களாகவே கருதி ஆதரித்து வந்தார். கஜன், பவன், மைலன், சாந்தலா ஆகிய பேரக் குழந்தைகளையும் அரவணைத்து வளர்க்கும் பாக்கியமும் அவருக்குக் கிட்டியது. ஆசிரியத் தொழிலில் இருந்து இளைப்பாறியதும் தன் இறுதிக் காலத்தை மகள் ரேணுகாவுடன் நியூசிலாந்தில் கழித்தார். எனவே பேரப்பிள்ளைகளின் வளர்ச்சியில் கருத்துச் செலுத்தும் பாக்கியமும் அவருக்குக் கிட்டியது.

சிறப்பாக அமைந்த அவர் வாழ்க்கையில் 1964 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் புயல் வீசியது. தன்னைக் கண்ணும் கருத்துமாக வளர்த்த தந்தை மாரடைப்பால் வவுனியாவில் எய்திய திடீர் மரணம் அவரை நிலைகுலையச் செய்தது. எனினும் தாய் தவிக்கும் தன்மை யறிந்து, குடும்பத்தின் தலைமகளாக விளங்கும் தன் பொறுப்புணர்ந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தன்னைப் போல் தன் உடன்பிறப்புக்களும் கல்வியில் முன்னேற முன்னின்றுழைத்தார். அவர்களுக்கு உரிய காலத்தில் தக்க துணை தேடி திருமணமுஞ் செய்து வைத்தார். அவருக்கு உறுதுணையாக அவர் கணவருஞ் செயற்பட்டார். அவர்களின் சேவையினால் கதிகலங்கி நின்ற குடும்பம் நல்வாழ்வு எய்தியது. ஆயினும் 1997 இல் அவரது தாயாரின் திடீர் மரணம் அவரைக் கதிகலங்க வைத்தது. செய்தி கேட்டு இலங்கை வந்து தாய்க்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு பற்றி ஆறுதல் பெற்றார்.

அமரர் தவமணி சுந்தரராஜா அவர்கள் பழகுவதற்கு இனிமையானவர், சிறந்த பண்பாளர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற எல்லைக்குள் வாழ்ந்தவர். எப்பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுறுசுறுப்பாகக் கருமம் ஆற்றுவார். கருமங்களை எண்ணித் துணிவர். துணிந்தால் பின்வாங்க மாட்டார். நேர்மை, நிதானம், உறுதி ஆகியவை அவர் செயல்களில் மிளிரும். எப்பாடுபட்டும் பிறர்க்கு உதவி செய்யும் மனப்பான்மையுடையவர். தான் பெற்ற இன்பம் எல்லோரும் பெற வேண்டுமென்ற பரந்த எண்ணங் கொண்டவர். இறைவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயம், தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயம், துர்க்கை அம்மன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், மாவை முருகன் கோயில், வட்டுக்கோட்டை பத்திரகாளி அம்மன் கோயில் ஆகிய ஆலயங்களின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடுடையவர். மகோற்சவ காலங்களில் தன்னாலான பொருளுதவி செய்து ஆலய கிரியைகளில் பங்கேற்றார். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிலும் மிகுந்த பக்தியுடையவர். காலத்துக்குக் காலம் தன்னாலியன்ற போது புட்டபர்த்தி சென்று அவர் அருளுரைகளைக் கேட்டு அதன் நெறிநின்று வாழ்வாங்கு வாழ்ந்தார்.

இறுதியில் குணப்படுத்த முடியாத நோய் ஏற்பட்ட போதும் இறை நினைவாகவே இருந்தார். பிரார்த்த வினையின் பயனால் சிறிது காலம் படுக்கையில் இருந்தாலும், சுய நினைவுடனும், கடவுள் தியானத்துடனும் காலங் கழித்தார். இறுதியில் எவ்வித சலனமுமின்றி ஆவணி 10ம் திகதி விடியற்காலை 8 மணியளவில் விநாயகருக்குரிய சங்கடஹர சதுர்த்தி புனித தினத்தன்று அவர் உயிர் எம் பெருமான் பாதார விந்தங்களைச் சென்றடைந்தது.


''பிறப்புண்டேல் இறப்புண்டு'', ''எப்பவோ முடிந்த காரியம்'' என்ற பெரியோர் வார்த்தைகளை மனங்கொண்டு நாம் ஆறுதலடைய முயற்சி செய்வோம். இனிய வாழ்வு வாழ்ந்து அமைதி கண்ட அம்மையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாடல்கள்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
கரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப்
பொன்னொடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மிமிகு திருவாரூரில்
மழவிடையார்க்கு வழிவழியாளாய்
மணங்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிபெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த மாறன் பதிமிகு கூடலி லுறைவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை

நாம் இவ்வுலகிற் செய்யும் எல்லாக் காரியங்கட்கும் தெய்வத் திருவருளே துணையாக இருக்கின்றது. எல்லாக் காரியங்களும் இடையூறில்லாமல் இனிது நிறைவேறச் செய்பவர் ஆனைமுகக் கடவுளே. முற்காலத்தில் காசிப முனிவர் முதலியோர் தம் முன் அருள்செய்ய எழுந்தருளிய ஆனைமுகன் மீது எட்டுப் பாடல்கள் பாடினர். (இவை விநாயகர் அட்டகம் எனவும் அழைக்கப்படுகின்றன.) அப்பொழுது அவர்களுக்கு அருள் செய்ய எழுந்தருளிய பிள்ளையார் 'அன்பரே நீங்கள் நம் மீது பாடிய இப்புகழ்ப்பாக்களை எவரேனும் காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று வேளைகளிலும் எம்மை நினைத்துப் பாடுவார்களேயானால் அவர்களுடைய காரியங்கள் யாவும் வெற்றியடையும். எட்டுநாட்கள் பாடினால் மனம் மகிழுமாறு நன்மையடைவார்கள். சதுர்த்தி விரத நாளில் எட்டு முறை பாடினால் எண்வகைச் சித்திகளும் கைகூடும். இரண்டு மாதங்கள் நாள்தோறும் பத்து முறை பாடினால் பாடியவர்கட்கு அரச வசியம் உண்டாகும். இரண்டு மாதங்கள் நாள்தோறும் இருபத்தொருமுறை பாடுவோர் அரசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை எனும் எண்வகைச் செல்வங்களை அடைவர்' என்று கூறி அருள்செய்து மறைந்தார். இது பிற்காலத்தில் அடியார்களால் ஓதி கைமேற் பலன் பெறப்பட்ட தோத்திரமாகும். அடியார்கள் அனைவரும் ஓதிப் பயன்பெறவேண்டும் என்ற நோக்கோடு இது இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

## நூல்

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து காக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டுங் களைக்கண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுடர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டும் குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

## நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினம் மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும் சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுபம்பெறும்எண் தினம் உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத்தொரு முறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
தூங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிக தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
நஹநஹ தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையாளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீரொளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையாளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்தவ யாயே ஊர்ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக மாயே காசினியே
ரோக நிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமக ளானாய் கலைமகளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா!

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா!

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரினி சந்தர கண்டினியே
ஜெய ஜெய கூஷ்மாண்டினி கந்த
மாதினி காத்யா யன்யவளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையாளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர் க்கு மிகவே.

என்போடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்போடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியுமின்னும்
மிகையான பூதம் மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதமிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
　　பசுவேறும் எங்கள் பரமன்
சலகமளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
　　உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
　　வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
　　அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
　　குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
　　உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
　　திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
　　அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
　　வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
　　மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
　　நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
　　அரசாள்வர் ஆணை நமதே.

***திருச்சிற்றம்பலம்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்ரஹ காயத்திரி

அஸ்வ த்வஜாப வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி
தந்நோ சூர்ய ப்ரசோதயாத் (சூரியன்)

நிஷாகராய வித்மஹே கலாநாதாய தீமஹி
தந்நோ சந்திர ப்ரசோதயாத் (சந்திரன்)

அங்கார காய வித்மஹே பூமிபாவாய தீமஹி
தந்நோ குஜ ப்ரசோதயாத் (செவ்வாய்)

சௌம்யகராய வித்மஹே கசிஸு தாய தீமஹி
தந்நோ புத ப்ரசோதயாத் (புதன்)

சராசாரியாய வித்மஹே ஸுரஸிரேஸ்டாய தீமஹி
தந்நோ குரு ப்ரசோதயாத் (குரு)

பார்க்கயாய வித்மஹே ப்ருகு ஸுதாய தீமஹி
தந்நோ சுக்ர ப்ரசோதயாத் (சுக்கிரன்)

சனீஸ்வராய வித்மஹே காகத்வஜாய தீமஹி
தந்நோ மந்த ப்ரசோதயாத் (சனி)

கிருஷ்ண வர்ணய வித்மஹே ஸர்ப்பரூபாய தீமஹி
தந்நோ ராகு ப்ரசோதயாத் (ராகு)

சித்ர வர்ணாய வித்மஹே சிம்ஹி ஸுதாய தீமஹி
தந்நோ கேது ப்ரசோதயாத் (கேது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி,
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலாத ருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
புதந்தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியே அருளும் உத்தமா போற்றி

## குரு

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
ப்ருகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரகதோஷம் இன்றிக் கடாஷித்தருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுக்கிரன்

சுக்கிரமூர்த்தி சுபமிக யீவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

### சனி

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா

### ராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆகவருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகுக்கனியே ரம்மியா போற்றி

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம், வம்பு வழக்குகளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரசஷி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தி மந்திரம்

ஓம் ஸத்நோ மித்ர, ஸம் வருண: ஸந்நோ பவத் வர்யமா:
ஸந்நோ இந்த்ரோ ப்ருஹஸ்பதி! ஸந்நோ விஷ்ணு ருகுக்ரம்:
நமோ ப்ரஹ்மனே: நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யஷ்யம்
ப்ரஹ்மாஸி த்வமேல ப்ரத்யஷம் ப்ரம்ம வதிஷ்யாமி,
ருதம் வதிஷ்யாமி: ஸ்த்யம் வதிஷ்யாமி: தன்மாமவது
தத்வக்தாரட்மவது: அவதுமாம் அவது வக்தாரம்:
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

ஸஹநா - வவது: ஸஹதென புனக்து: ஸஹ வீர்யம்
கரவாவஹை: தேஜஸ் விநாவதீத - மஸ்து: மாவித் விஷாடன
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

ஓம் பூர்ணமத்: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண - முதஷ்யதே:
பூர்ணஸ்ய பூர்ண - மாதாய, பூர்ணமேவா வஜிஷயதே
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

அஸத்தோமா ஸத்கமய, தமோஸாமா ஜோதிர்கமய
ம்ருத்யோர்மா அம்குதம் கமல ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







குடுபத்தினருடன்
தவமணி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
*Sri Nagulambika Sametha Sri Naguleswara Swamy Temple*

Sivasri K.Naguleswara Kurukkal, J.P
GOVERNING AUTHORITY & CHIEF PRIEST
Naguleswaram, Keerimalai,
Kankesnathurai, Sri Lanka

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும், பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீ லங்கா.

# ஆத்ம சாந்தி

திரு.சுந்தரராஜா அவர்களின் மனைவி சிவபதமடைந்த துக்க செய்தி அறிந்து மனம் துயரமடைந்தோம்.

அன்னார் எந்நேரமும் புன்சிரிப்புடன் - வருக வருக என்று அழைத்து இன்புற்று விருந்து வைத்தும் உபசரிப்பார். ஆலயந் தோறும் தவறாது பூஜை வழிபாடுகள் செய்விப்பார்.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துடன் மிகவும் தொடர்பு கொண்டிருந்தவர்.

அன்னாரின் கணவர் அவருக்காகப் பிரார்த்தனைகள், நவக்கிரக சாந்திகள் செய்து கூடிய விரைவில் சுகம் பெறவேண்டிப் பூஜைகள் செய்வித்தார். ஆனால் அன்னார் அதேநேரத்தில் சிவபதமடைந்து விட்டார்.

பிறப்பிலிருந்தே இறப்பும் நியமிக்கப்பட்டது. ஆகவே அன்னாரின் மறைவால் ஆழாத் துயரமடைந்திருக்கும் குடும்பத்தார் அனைவருக்கும் ஆறுதல் கூறி ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம்சாந்தி!

**சிவஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்கள்**
**ஆதீனகர்த்தாவும், பிரதம சிவாச்சாரியாரும்**
**நகுலேஸ்வரம், கீரிமலை.**

| | |
|---|---|
| Love is God. Live in Love. | அன்பே கடவுள். அன்பிலே வாழ். |
| Start the day with love. | அன்புடன் நாளைத் தொடங்கு |
| Spend the day with love. | அன்புடன் நாளை செலவிடு |
| Fill the day with love. | அன்புடன் நாளை நிரப்பு |
| This is the way to God. | இதுவே இறைவனை அடையும் வழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# *Sri Durgadevi Devasthanam*

Tellippali, Sri Lanka

## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

தெல்லிப்பழைத் திருவூரில் கடவுள் பக்தியிலும், கல்விச் சிறப்பிலும் மேன்மை பெற்ற குலத்தில் உதித்தவர் திருமதி.தவமணி சுந்தராஜன் அவர்கள். எங்கள் துர்க்கா தேவி தேவஸ்தானத்தோடு மிகவும் தொடர்புடைய குடும்ப உறுப்பினர். புகழ்பூத்த மகாஜனாக் கல்லூரியில் பல்லாயிரம் மாணவர்களின் அபிமானத்துக்குரிய ஆசிரியர். எல்லாச் சிறப்புடனும் மேன்மை பெற்று விளங்கிய அம்மையார் அவர்கள் நியூஸிலாந்து நாட்டில் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் தாம் பிறந்த மண்ணில் வாழமுடியாமல் பிறநாட்டில் இன்று பலரது வாழ்வு நிறைவுபெறுகிறது. என் செய்வோம்? இறை நியதியை யார் வெல்ல முடியும். சிறந்த கல்வித்தொண்டு ஆற்றிய நல்லாசிரியரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது தேவஸ்தானம் சார்பில் ஆறுதல்களைச் சமர்ப்பித்து அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

| | |
|---|---|
| See no evil, see what is good. | தீயதைப் பாராதே, நல்லதையே பார் |
| Hear no evil, hear what is good. | தீயதைக் கேளாதே. நல்லதையே கேள் |
| Talk no evil, talk what is good. | தீயதைப் பேசாதே, நல்லதையே பேசு. |
| Think no evil, think what is good. | தீயதை நினையாதே, நல்லதையே நினை. |
| Do no evil, do what is good. | தீயதைச் செய்யாதே. நல்லதையே செய். |
| This is the way to God. | இதுவே இறைவனை நோக்கிச் செல்லும் வழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Beloved Wife Thavam

I am ever so grateful to God that he gave you as my wife and companion. We were fortunate to work in the same school during most of our married life. We had many events, people and places in common to both of us and we could relate to all of these together. Especially in our retired years, we could spend the day reminiscing.

You not only cared for our children and me but also for our extended families just like our own. You were keen to provide better education for my nieces and nephews from Vaddukkoddai. They lived with us at our house in Tellippalai to attend Mahajana College at various times.

You put others' needs and happiness ahead of your own. When I wanted to go to Zambia, you didn't really like to leave your mother and siblings but you came to Zambia to make me happy. You were really lost for some time without Mahajana College and home but you quickly made friends and adjusted to the new environment. You got involved in the Zambian schools just like you were at home and the students and fellow teachers became very fond of you. You even went out of the way to help a Zambian neighbour deliver a baby.

You entertained all the friends who came to our house. Many people stayed at our house during week-ends and you looked after them happily.

By God's grace, we were able to visit many temples in India and Puttaparthi which we both really enjoyed. We were also able to keep in touch with all of our relatives and many of our past students which gave us much happiness and satisfaction.

You always looked after me and made sure I was comfortable. Even the week before you went to the hospital, you were able to serve our lunch. You have done more than what most people could do in their life. So it is time for you to have rest.

I pray to God to keep you close to him and take care of you.

**Loving Husband,**
**Sundararajah**
**Newzealnd**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Dearest Amma

As much as we like the people around us to live forever, we cannot be selfish in wanting the dear ones to suffer in this world for too long.

Amma, you lived a full and happy life. You touched many hearts and earned the respect and love of many people. Life is always up and down but yours was mostly up which is probably why you had to go through a few difficult months in the end to compensate for the good times you had.

As most children do, I too learnt and admired many qualities you had as a person. Some I tried to acquire but some were too hard even if I strived.

You were calm and collected even when we were young children. I do not remember even once being scolded or being asked 'why did you do that?'. My children now ask me not to preach when I try to give some advice. I do not remember feeling that we were being preached or told how to live our life.

You taught me how to balance time. I have seen you bring up a family, entertain friends and help others in need while working long hours at school but never heard you complain. You always seemed to find time whenever events such as weddings had to be organised and got them done efficiently.

Diplomacy is another trait you possessed. You seemed to know how to tackle emotions without upsetting the people involved and to comfort them. I have seen many people approach you for counselling and problem solving and they were grateful for the solutions.

The most important quality I learnt is hospitality. When we were in Zambia, we were one of the few Sri Lankan families in that particular town. There were no telephones those days. People would turn up at all hours as they had been referred by other friends. You always cooked a meal and most of them would stay the night even though we had never met them before. A number of such acquaintances have formed long term friendship with you. A German family were passing through the town and they had to stay the night. Our German neighbour turned them down as they had no room in their house. You invited them to our house to stay the night and since then they visited us every time they passed by.

Our family is privileged to have had you live with us for so many years. Gajan & Bhavan were fortunate to have had the time with you while growing up. It is time for us to let you go and be in peace. God will take care of you.

**Loving daughter**
**Rena**
**Newzealand**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amma

We were devastated when we learned Amma had terminal cancer. Unfortunately, we knew too well what the end result was going to be. We are glad to have spent time with her during the last few months. The last time we saw her, she showed her usual strength she had inside her, even though the illness was taking a toll on her. She was happy to see Myilan and Shantala.

Amma had been the foundation and backbone of our family. She had the natural trait of being able take charge and make firm decisions without a wavering mind. She kept her cool when making her point, whether at home or at work. Having grown up in a large extended family, she was a "people person". These qualities enabled her to gain a lot of respect from her siblings, relatives and students.

In public life, Amma was well known as a great teacher and advisor. I know her for nurturing and guiding me through my life. My memorable times with Amma are from my childhood and teen years in Zambia. I still tear thinking about the numerous nights Amma used to stay awake because of my asthma.

Her cooking skills came alive when we moved to Zambia. She always prepared great food and tried new recipes from Indian friends. She enjoyed entertaining people and loved their company. Our home in Kasama, Zambia was a stop over place for numerous of people who traveled from Lusaka or the copper belt.

When we moved to Zambia, she made sure my transition from Tamil medium of education to English medium was quick and easy. During my teen years, she ensured that I learned biology, although my favorite subjects were mathematics and physics. She instilled the importance of education in me.

All through my life, Amma was there as a friend and gave me guidance when making important decisions. Now, I have to depend on the foundation she gave and the memories she has left behind to make it through the rest of the way.

**Loving son Anujan and daughter in-law Anushya.**
**California, USA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Devoted and Dedicated Ammamma

We are gathered here today to celebrate the life of my grandmother, who is, to some, a mother, to others, a companion, or a friend, or a teacher, but to Bhavan and I, she is all of these combined. She was a kind, thoughtful, and committed woman, who put others' needs ahead of her own.

She was a wonderful provider, and a great cook, who made sure Bhavan and I, both ate well.

Ammamma was devoted and dedicated, especially on the subject of biology. When I was a primary school boy, Ammamma was teaching a friend, who was a couple of years older than me, and she asked me whether I wanted to listen as well. I hesitantly accepted, even though the flower anatomies seemed overwhelming and complex, but soon after observing and comprehending her methodical yet simplified descriptions, I become enthused and interested in botany. I was inspired by her teaching, and I think some of her passion in biology has rubbed off onto me.

Ammamma was also a very composed woman, and very sympathetic when we made mistakes, as horrible as they may seem.

I remember an incident several years ago, when my food caught on fire in the microwave. Anyway, after the initial shock and astonishment of "is that pie supposed to be on fire?", I started panicking and crying, while the glowing fire rapidly took control, and looked very threatening. Then out of the blue, my calm and collected grandmother came to save the day – after carefully stopping the microwave, she cautiously removed the plate, while it was still on fire, and placed it in the sink. Then she sensibly watered the plate down, extinguishing the fire, and almost immediately offering to make another meal. She didn't even get angry at me for causing the whole disaster when I left a metallic wrapper on the plate which created the fire.

Ammamma was caring and considerate. She never said "I told you so" or "why did you do that". She would instead tend to our injuries with patience, or clean up the mess without complaint. When I was really small, I was sitting next to the stove, tempted to put my fingers on it; because it wasn't turned on, so how could it be hot? Ammamma told me not to, because the stove was still hot, and you will burn your fingers. Little me didn't believe her, and so I said, "it's not hot" and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

touched my fingers on the stove for 2 or 3 seconds, before the high temperature set off the pain receptors on my skin, triggering a reflex action, pulling my arm away, followed by tears and swollen fingers. Immediately Ammamma put my fingers under cold water, and took care of me. She didn't say any stern words, whereas others might have scolded me, because clearly we both knew my lesson had been learnt.

Both Bhavan and I are so lucky to have had Ammamma in our lives from when we were babies, till now as teenagers, and our words cannot nearly appreciate what she has done for us. I know that her soul will live on in us, in nature and in our memories. We will miss you, and will forever love you.

**Loving Grandson**
**Gajan**
**Newzealand**
**(Speech at funeral service)**

# Paddi Where are you?

Baby Paddi Where are you?
I can't believe that you went to God.
I can't see your lovely face anymore

Whenever I saw you, you always asked me to give a hug
But I always refused.
I'd like to give now
But you are not here.

I'm searching for your smilingly face and your special sofa is empty
Then only I realized you are not here now
You went to God
Baby Paddi we all miss you.

**Haresh Raguraj**
**Newzealnd**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Kind and Loving Grandma

Albert Einstein once said that, "only a life lived for others is a life worthwhile." This was very much the case with my grandmother, who was a kind and loving person, and went out of her way to help others.

Gajan and I have been lucky to have grandparents with us, from when we were young to now in our teens. I have known her all my life and she has been a nurturing person throughout my 15 years.

My grandmother would prepare food for the two of us when our parents were not at home. I remember when I was in kindergarten; my grandfather would pick me up. The first thing I would always ask him was "what has Ammama made for lunch?" Even recently, she would still make food for Gajan and me.

They say that if you choose a job you love, you will never have to work a day in your life. I think this is very appropriate for my grandmother who loved to teach. I too like many of you, have experienced her great teaching skills. Being a science teacher, my grandmother would often help me with my biology. Others would tell me how lucky I was to have a grandmother who could help me. I would ask her for help and she would kindly teach me which I am greatly thankful for.

She was a kind person. Whenever my grandparents wanted to go shopping to places such as the warehouse, I would always join them, knowing that they would buy me toys or chocolate. Whenever it was Gajan's or my birthday, we would both receive presents, because she didn't want either of us to feel upset.

I feel very lucky to have had a grandmother through my life, especially one so kind and loving. It is truly a blessing considering that many others of my age have never seen their grandparents. We will never forget her and we will never forget how she affected us.

"Death ends a life, not a relationship. You live on – in the hearts of everyone you have touched and nurtured while you were here."

**Loving Grandson**
**Bhavan**
**Newzealand**
**(Speech at funeral service)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத தீபம் உன் நினைவலைகள்

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்கு ஆகியன ஒருங்கமையப் பெற்றவர் நம் அக்கா அமரர் திருமதி தவமணி சுந்தரராஜா அவர்கள். எக்கருமத்தையும் நல்ல வண்ணம் எண்ணித் துணிவர், துணிந்த கருமத்தில் தடுமாறாது, தழும்பாது செயலாற்றுவர், அதற்குரிய அறிவுத்தெளிவும் அவர் பெற்றிருந்தார். இன்று அவரை இழந்து நாமெல்லாம் தவிக்கின்றோம்.

சிறு வயது முதற்கொண்டு தான் வேறு, தன் உடன்பிறப்புகள் வேறு என்று கருதி வாழ்ந்தவரல்லர் நம் அக்கா. தான் பெற்ற இன்பம் யாமெல்லாம் பெறவேண்டுமென்று கருதி வாழ்ந்தவர். மேற்படிப்பிற்கு இந்தியா சென்ற போது யாமும் அக்கல்வியைப் பெற ஆவன செய்தார். அதேபோல் தன் உடன்பிறப்புக்கள் யாவரும் மேற்கல்விபெற வேண்டுமென்ற பெரும் வேட்கையுடன் தொழிற்பட்டு வெற்றி கண்டார்.

தந்தையைச் சிறு வயதில் இழந்து தவித்த போது ''யாமிருக்கப் பயமேன்'' எனத் துணிவு காட்டி, எம் தேவைகளையெல்லாம் குறைவின்றி நிறைவேற்றி வைத்தார். குடும்ப தீபமாகத், தாய்க்குத் தலைமகளாக அவர் விளங்கி ஆற்றிய சேவை அனந்தம். அவரின் அயரா முயற்சியால் யாமெல்லாம் இன்று நல்வாழ்வு பெற்றிருக்கின்றோம்.

அவர் சேவை எம்மட்டில் அமைந்ததல்ல, எம் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாகக்கருதி அவர்கள் வளர்ச்சியில் கருத்துச் செலுத்தினார். பிள்ளகளும் சிறு வயதில் அவரையே 'அம்மா' என்று அழைத்தனர். தன் பிள்ளைகள் போல அவர்களும் கல்வியில் உயரவேண்டுமென விழைந்து பலவிதத்தில் உதவி செய்தார். அவர்களின் திருமணத்தின் போது மெய்வருத்தம் பாராது, நியூஸிலாந்திலிருந்து வந்து திருமணக்கிரியைகளில் பங்கேற்று, முன்னின்று நடாத்தி வைத்தார்.

அக்கா அவர்கள் தனக்கென வாழாத பிறர்க்குரியாளர், உறவினர்களுக்கொல்லாம் பல விதத்தில் துணையாக இருந்தவர். அவர்கள் தேவையுணர்ந்து, வேண்டிய வேண்டியாங்கு உதவியவர். உற்றார், உறவினர்கள் மட்டுமன்றி பாடசாலைச் சமூகத்திற்கும் பல சேவைகளை ஆற்றியுள்ளார். அவரிடங் கற்று மருத்துவர்களாக வெளியேறிய மாணவர்கள் பலர் இன்றும் அவரைப் போற்றி வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என வள்ளுவர் இல்வாழ்வாருக்கு வகுத்த ஐம்புலங்களையும் ஓம்பி வாழ்ந்தவர். இறைவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயம், தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயம், துர்க்கை அம்மன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், மாவை முருகன், வட்டுக்கோட்டை பத்திரகாளி அம்மன் ஆகியவை அவர் வழிபடு தலங்களாகும். தன்னாலியன்ற பொருளுதவி செய்து அவ்வாலய வளர்ச்சிகளில் ஈடுபாடு காட்டினார். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைக் குருவாகக் கொண்டு அவரின் அருளுரையின்படி தன் வாழ்க்கையை அமைத்துத் தொண்டாற்றி நிறைவு கண்டார்.

எமக்குப் பெருந்துணையாகவிருந்த எங்குலவிளக்கு, உடல் நலிவுற்றிருந்த போது அவரைக் காணமுடியவில்லையே என்ற பெரு வருத்தம் எமக்குண்டு. "வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய் வினை ஒழிந்தால் தினைப் போதும் நில்லாது" என்ற உண்மையை மனத்திற் கொண்டு நாமெல்லாம் ஆறுதலடைவோமாக.

மீளாத்துயில் அடைந்து விட்ட எம் பாசமிகு சகோதரியே!
மறக்க முடியுமா! அழிக்க முடியுமா! நீக்க முடியுமா!
எங்கள் மேல் காட்டிய நீங்காத பாசம்!
எங்கள் உயர்வில் தாங்கள் காட்டிய கரிசனை!
எங்கள் வாழ்வோடு ஒன்றிய உணர்வலைகள்!
தங்கள் நினைவலைகள் என்றென்றும்
அணையாத தீபமாக எம்முள் ஒளிவிட்டு உயிர்ப்பூட்டும்.

**ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் சகோதரி,**
**நவமணி ஞானலிங்கம்**
**இலங்கிலாந்து**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரில்லாத் தவமணி

மகாஜனக் கல்லூரியில் உயர் வகுப்புகளுக்கு விஞ்ஞானப் பாடங்களை கேரளாவிலிருந்து வந்த ஆண் பட்டதாரிகள் கற்பித்துக் கொண்டிருந்த காலம் அது. 1954 ஜூன் மாதம் என்று நினைக்கின்றேன், நான் எஸ்.எஸ்.சி. யில் இருந்த போது. விஞ்ஞானம் கற்பிக்கத் தெல்லிப்பளையைச் சேர்ந்த ஒரு பெண் பட்டதாரி எமது வகுப்புக்கு வருகின்றார் என்று அறிந்து காத்திருந்தேன். நேரிய பார்வை, சீரிய உடை, உடைக்குப் பொருத்தமான நிறத்தில் மலர்கள் கொண்டையில், எடுப்பான தோற்றம், எவரையும் கவரும் புன்னகையுடன் காட்சியளித்தார் செல்வி தவமணி முருகேசபிள்ளை. இவரது சாயல் அந்த ஆண்டு வெளிவந்த மிஸ்சியம்மா திரைப்படத்தின் கதாநாயகியை பிரதிபலிக்க, இவருக்கு 'மிஸ்சியம்மா' என்று பட்டம் சூட்டி மகிழ்ந்தோம்.

தவமணி ரீச்சர் **எஸ்.எஸ்.சி.** யில் உயிரியலும், **எச்.எஸ்.சி.** யில் தாவரவியலும் கற்பித்தார். உயிரியல் ஆசிரியராகக் கடமையாற்றிய ஐ.சி. இடிகுலாவின் ஆசிரிய ஒப்பந்தம் தவமணி ரீச்சரின் வருகையால் முடிவுக்கு வந்தது. இந்த இரண்டு வகுப்புகளிலும், ரீச்சரின் முதல் மாணவர்களில் அடியேனும் அடங்குவேன். வகுப்பு அறைக்கு வெளியே, மாணவர்களும் ஆசிரியரும் நண்பர்கள் என்ற புரட்சியைக் கொண்டு வந்து அதில் வெற்றி கண்ட ஜனரஞ்சக ஆசிரியர் ஆனார். ரீச்சரிடம் கல்வி கற்க , உதவி பெற, உரையாட என்று மாணவர்கள் அவர் வீடு சென்று வருவது என்பது வழக்கமாகிவிட்டது. நான் இதற்கு விதி விலக்கல்ல. சென்றேன். அவர்கள் குடும்ப நண்பராகி விட்டேன். மகாஜனக் கல்லூரியின் பொன்விழா 1960 இல் நடைபெற்றது. அதே ஆண்டு ரீச்சரின் திருமணம். அவரிடம் கற்ற நிர்வாகத் திறன் மூலம் அவரது திருமணத்தின்போது பல பொறுப்புக்களை ஏற்று நடத்தி திரு. திருமதி சுந்தரராஜா தம்பதியினரின் நன்மதிப்பையும் நட்பையும் பெற்றுக்கொண்டேன். கொழும்பில் படிக்கும் போது விடுமுறைகளிலும், தொழில் பெற்றபின் ஓய்வு நாட்களிலும் கணேச விலாவிலும் கல்லூரியிலும் ரீச்சரைச் சந்தித்து அவரிடம் ஆலோசனைகளும் அறிவுரைகளும் பெற்றுவந்தேன்.

ரீச்சரின் சகோதரி பூமணிக்கும் எனக்கும் ஏற்பட்ட மனப்பொருத்தத்தை முதன் முதலாக நான் ரீச்சரிடம் கூறியபோது மிக மகிழ்ச்சியாகக் கணவனிடம் கூறிப் பின்னர் தாயாரிடம் விளக்கி, கணவர் சகிதம் எனது பெற்றோரிடம் சென்று ஆலோசித்து திருமண ஒழுங்குகளைச் செய்து அதனைச் சிறப்பாக நடத்தி வைத்த சீமாட்டியை நாம் இருவரும் அடிக்கடி நினைவு கூருவோம். எனது வீட்டில் மட்டுமல்ல என் உறவினர் எல்லோரது மனதிலும் தனியிடம் பிடித்திருந்தார் ரீச்சர். எனது பெற்றோரில் தனித்துவமான அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். எனது நகைச்சுவை கலந்த பேச்சு அவருக்குப் பெரிதும் பிடிக்கும். அவரது ரசனை உணர்வும் எனக்குப் பிடிக்கும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் முதல்வரான ரீச்சர், தந்தை மறைவின் பின்னர் சகோதரங்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறையாக இருந்து ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைத் துணையைத் தேடுவதில் தாயாருடன் இணைந்து செயற்பட்டு திருமணங்களை முன்னின்று நடத்தி வைத்தார். மகாஜனக் கல்லூரியில் முதல் பெண் விஞ்ஞானப் பட்டதாரியாகக் காலடி எடுத்து வைத்தது தொடக்கம் 1975ஆம் ஆண்டு இறுதி வரை அவரிடம் படித்துப் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று உலகின் பல்வேறு நாடுகளிலும் உயர் பதவிகளில் உள்ள பழைய மாணவர்கள் எண்ணில் அடங்கா.

தொழில் நிமித்தம் சாம்பியா, போபுதட்சுவானா ஆகிய நாடுகளில் இருந்த போதும், பின்னர் ஓய்வு பெற்று நியூசிலாந்தில் வாழ்ந்தபோதும் தபால் மூலமும் தொலைபேசி மூலமும் எம்மோடும் பிள்ளைகளோடும் அடிக்கடி தொடர்பு கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ரீச்சர் முன்னின்று நடத்திய திருமணங்கள் எண்ணிக்கையற்றவை. அவர் நிற்கும் இடத்தில் நிறைவிருக்கும், பொலிவு இருக்கும், துணிவு ஏற்படும். 1998 இல் எங்கள் புதல்வியின் திருமணத்திற்குக் குடும்பமாக வந்து சிறப்பித்த காட்சியும், மறுநாள் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க இராப்போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையும் மறக்க முடியாத நிகழ்வுகள். ஆசிரியர்,ஆலோசகர், நண்பர், மைத்துனி, மந்திரி என்று பல நிலைகளில் நின்று எம்மை வழி நடத்தியவர் ரீச்சர்.

திரு. திருமதி சுந்தரராஜா தம்பதிகளின் ஐம்பதாவது திருமண நிறைவை 2010 இல் விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருந்த வேளையில் ஐம்பதாவது திருமண ஆண்டில் ஆண்டவன் எமது ரீச்சரை தன்னோடு அழைத்துக் கொண்டான். இறுதி யாத்திரையில் நாம் கலந்து கொள்ள முடியாமல் போனாலும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் குடும்பமாக நியூசிலாந்து சென்று அவரோடு இருந்து அவரின் சாதனைகள், தொண்டுகள், தியாகங்கள் மற்றும் மகிழ்ச்சியான சம்பவங்கள் முதலியவற்றைப் பகிர்ந்து கொண்டு அவரோடு கழித்த சில நாட்கள் எமக்கு மன ஆறுதலைத் தந்தவண்ணம் உள்ளன.

இவ்விதம் ஆசிரியராக அறிமுகமாகி நண்பராகப் பழகி, மைத்துனியாக உறவாடி எங்கள் வாழ்க்கையுடன் ஒன்றாகி விட்ட பெருமாட்டி எம்மைப் பொறுத்தளவில் எம்மை விட்டுப் பிரியவில்லை. அவர் எங்களுடனேயே இருப்பது போன்ற உணர்வு என்றுமே எம்மை விட்டு அகலாது, அகலவும் முடியாது.

**துரைசிங்கம்- பூமணி மற்றும்**
**பிள்ளைகள் - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Baby Acca", My Big Sister, My Teacher

We have lost "Baby Acca", the most important person in our family. Her loss creates a big void as she is irreplaceable. She was "Baby" to my parents and her older relatives. Out of respect to our big sister, all of us who were younger affectionately called her "Baby Acca". Her loss is felt not only by her family but also by all the people and friends she had touched through her illustrious career at Mahajana College, Zambia, Bobothatswana and New Zealand.

"Teacher" is how she was called by most of her friends, colleagues and students. She joined Mahajana College as a Biology teacher after graduating from Madras Christian College. I was fortunate to be one of her very first students in Mahajana. Her teaching inspired me to become a better student and she made me study well enough to enter Medical School. At home, she was my big sister. She showered me with all the love and kindness of a big sister. I owe her a great sense of gratitude because if not for her, I would not be the person I am today.

Baby Acca when it came to teaching, she was very dedicated. She worked hard to make every student do their best, yet all her students admired her as well for her caring and compassion. They considered her as a real friend and most of the Senior Class students found their way to our house in their free time for a cup of tea and friendly discussion with their favorite teacher.

Above all, I admire "Baby Acca" most for the courage she showed me during the last days of her illness. She had been ill for several months but she never complained and took everything in stride, comforting us instead by stating that she had a very full, wonderful life and had no regrets. Yes, she had a very full and illustrious life. We are thankful to have had her in our lives, and her memory will be with us always. God bless her soul.

**Her Beloved Periyathamby, Ganesan**

**U.S.A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்பத்தின் அணையா தீபச் சுடர்

ஆகஸ்ட் மாதம் பத்தாந் திகதி அதிகாலை இனிதாக விடியும் என எதிர்பார்த்திருந்த வேளை, அமெரிக்காவில் இருந்து எனது அண்ணன் Dr.கணேசன், பேபியக்கா எங்களை விட்டுப் போய்விட்டா எனக் கூறிய செய்தி எங்களுக்கு இடி விழுந்தாற் போலிருந்தது.

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த அக்கா பப்பா இறந்ததும், குடும்பப் பொறுப்பை தாமே ஏற்று வழிநடத்திச் சென்றதுடன், எல்லோரினதும் திருமணங்களையும் முன்னின்று நடத்திய பெருமை அவவையே சாரும்.

எங்களுடைய திருமணத்தை நடத்திய மாதிரியே எனது மகளின் திருமணத்தையும், தான் நியூஸிலாந்திலிருந்து வரமுடியாத நிலையிலும், தொலைபேசிமூலம் என்னென்ன மாதிரிச் செயல்படவேண்டும் என்ற வழிமுறைகளைக் கூறினார். அவவின் மனிதாபிமான பண்பை நாம் ஒருபொழுதும் மறக்கமுடியாது.

தன்னலம் கருதாது பிறர் நலன்களைக் கருத்திற் கொண்டு வாழ்ந்து காட்டினார். மாதம் ஒரு தடவையாவது தொலைபேசி மூலம் எங்களுடைய சுகங்களை விசாரிப்பது மல்லாமல் புத்திமதிகளையும் கூறுவார். தான் நோய்ப்பட்ட நிலையிலும், தளர்ந்த குரலில் இனி என்னால் கதைக்க முடியாது உமது உடல் நலத்தையும், அதேபோல் உமது குடும்பத்தினரின் நலங்களையும் கவனி எனக் கூறிச் சென்றதுதான் அவவின் கடைசி உரையாடல்.

அக்கா செய்த உதவிகளை என்றென்றும் மறக்க முடியாது. அவ்வுதவிகளுக்கு இங்கிருந்து ஒன்றும் செய்ய இயலாததினால், ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் கோயிலுக்குச் சென்று அவவின் பெயரில் அர்ச்சனை செய்வித்து, வீபூதி பிரசாதம் அனுப்பியதே எம்மால் இயன்ற கைமாறாகும்.

ஒருநாள் வழக்கத்திற்கு மாறாக மகள் லண்டனிலிருந்து எப்படி இருக்கின்றீர்கள், சுகமாக இருக்கின்றீர்களா? என விசாரித்தா. நான் நலமாக இருக்கின்றேன் எனக் கூறினேன். தொடர்ந்து, மகள் எனது வீட்டின் பின்புறத்திலுள்ள பெரிய மரம் பாறி விழக் கனாக் கண்டேன், அதுதான் பயந்து கேட்டதாகக் கூறினா. பாறி விழுந்தது மரமல்ல எமது குடும்ப விளக்காகத் திகழ்ந்த அக்காதான்.

அக்காவின் அன்பு, நேர்மை, திறமை, ஆண்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, குடும்பத்தை ஒன்று சேர்த்து வைத்திருக்கும் திறமை போன்றன அவவின் சிறந்த குணங்களாகும்.

"கணேசவிலா" வின் ஒளிச்சுடர் ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி அணைந்தாலும், எங்கள் உள்ளத்தின் உள்ள ஒளிச்சுடர் என்றுமே அணையாது ஒளிமிளிர்ந்து கொண்டே இருக்கும்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**உமது பிரிவால் துயருறும் சகோதரி**
**திருமதி.கி.தேம்பாமலர்**
**ஸ்ரீலங்கா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Baby Acca

Once, long ago, in a village in Ceylon called Tellippalai there lived a big family of two loving parents and ten children in a newly built large grand house called 'Ganesha Villa'. That was a peaceful, carefree and joyous time. The first-born was a girl, pet-named as 'Baby' by her parents and eventually became the loving 'Baby acca' within her inner circle of friends and family. That was our family with my Baby Acca as the eldest. That was the best time of my growing years, memories which I can only dream of now.

As kids we had our share of fun, some of them being rebellious - fun was mixed with quarrels and even occasional fist fights. With my father mostly away on work assignments, my mother, the universal 'Mommy' a very loving and gentle soul needed help to maintain control and discipline her boisterous children. Here starts the definition of our Baby Acca, 'the pillar of the family' exercising her most important role, which is to take charge of her siblings spats so that Mommy could relax in the easy chair on the veranda whenever she found a break from her daily tasks.

As time progressed and nature took it's course there occurred some key events. Baby Acca, you married a wonderful man, known to all as 'Athan', whom we found to have the best interest of our family at heart. Papa passing away was a sudden and an unexpected event that changed our lives overnight. Baby acca, your role now expanded to fill this void - managing the challenges and burdens expected of a father to provide to his large family. Fortunately Baby Acca you were born with certain traits, which are rare qualities not every one is blessed with. You used your extraordinary traits, such as much courage, strong character, good judgment, diplomacy and people skills, to see your loving siblings successfully through their growing years. Baby Acca, only you could have done this all the while raising your own family of two wonderful children, with Athan beside you.

Baby Acca, you have helped me in countless ways. You were selfless and expected nothing in return. I can only thank you for what I am today. Baby Acca you meant so much to us, the Murugesapillai Family. I shall miss you.

Baby Acca, you have earned your right to be in Heaven. The time has come for you to rest in peace. May Gods blessings shower on you, always, Baby Acca,

**Your loving brother,**
**Magesan**
**Canada.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Brother's Thoughts

To my dearest sister baby akka,

I was deeply saddened to hear of your passing. My heart goes out to my brother-in-law Sundararajah and my niece and nephew. Baby akka achieved all that she wanted in her prosperous life including taking care of her family. She was a wonderful sister, a very friendly and caring person.

Lots of my cherished memories have you in them. Looking back, I can still vividly picture many a moment in our childhood years.

I'm genuinely distraught by the fact that I could not converse with you over phone and couldn't convey my feelings before your untimely passing. I'm also deeply distressed by the fact I didn't get the opportunity to see you in New Zealand.

My heart still aches in sadness and my secret tears flow, what it meant to lose you, no one will ever know. You will be deeply missed, however I take solace at the fulfillment of your long life.

**Your loving brother**
**Paapan (M.Nadesan)**
U.K

There is only one Religion the Religion of Love"
உலகில் உள்ளது ஒரே மதம்தான் அதுவே அன்பு மதம்

There is only one Language the Language of Heart
உலகில் உள்ளது ஒரே மொழிதான் அது இதய மொழி

There is only one caste the caste of Humanity
உலகில் உள்ளது ஒரே குலம்தான் அதுவே மனித குலம்

There is only one God and he is Omnipresent
உலகில் உள்ளது ஒரே தெய்வம்தான் அது எங்கும் நிறைந்தது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை.....

தெல்லிப்பழை கணேசவிலாக் குடும்பக் கோயிலின் கோபுர தீபமே, எங்கள் வாழ்வின் விடிவெள்ளியே, மண்ணுலகு வாழ்வு போதுமன்றோ, விண்ணுலகு நோக்கி விரைந்து விட்டீர்கள்? ஆலமரம் போன்று நீங்கள், விழுதுகளாகிய எங்களை எப்பொழுதும் நல்வழி காட்டி, கல்வியில் ஊக்கமளித்து, வளமான வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்தது போதுமென்று நினைத்து விட்டீர்களா? உங்களது அன்புக் கணவனையும், ஆருயிர் செல்வங்களையும் மறந்து விட்டீர்களா? சில மாதங்களுக்கு முன்பு உங்கள் உடல் நிலை அறிந்து அதிர்ச்சியுற்றோம், துடித்தோம், துயருற்றோம், கோயில்கள் சென்று மனம் சாந்தி பெறப் பிரார்த்தித்தோம். எனினும் 10.08.09 திங்கட்கிழமை விடியும் வேளை நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்ற செய்தி கேட்டு நிலை குலைந்தோம். ஞாயிறு தோறும் தொலைபேசியில் உரையாடுவீர்கள். எனினும் உங்கள் உடல் நிலை பற்றிக் குறிப்பிடுவதில்லை. இறுதியாக நீங்கள் பேசிய போதும் எங்களைப் பற்றியே விசாரித்தீர்கள். நாம் எல்லோரும் இருந்தும் கடைசியில் உதவ முடியாமல் போய்விட்டதே என்று எப்பொழுதும் எங்களது மனம் வருந்திக் கொண்டேயிருக்கின்றது. எங்களை ஒன்றிணைத்துத் தேவையான பொழுது ஆலோசனைகள் வழங்கி எங்களை வழிநடத்தினீர்கள். இனி என் செய்வோம்? அன்பு, பண்பு, ஆற்றல், அறிவு, இறைபக்தி என எல்லா நற்பண்புகளும் கொண்ட உங்கள் பிரிவு எப்படி எங்களால் ஏற்க முடியும்?

''பிறப்பு உண்டேல் இறப்பு நிச்சயம்'' இது உலக நியதி. இதனை அறிந்திருந்தும் எங்கள் அன்பிக்குரிய ''பேபி அக்காவின்'' நிகழ்வை எண்ணித் தாங்கமுடியாத துயர் அடைகின்றோம். நாம் இப் புவியில் பிறக்கும் பொழுது எம்முடன் எதைக் கொண்டு வந்தோம், இத் தரணியை விட்டு நீங்கும் போது எதனை எம்முடன் எடுத்துச் செல்வோம். நீங்கள் தேடிய தேடல்களில் பெரும் பகுதியை உங்களது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், உங்களை ஆளாக்கிப் பெருமை தந்த கல்விக் கூடத்திற்கும் பயன்படுத்தி வாழ்ந்து காட்டி, எடுத்த பிறவியின் நோக்கத்தை அர்த்தமாக்கி விட்டீர்கள். தனக்கெனத் தனித்துவமான ஆளுமையும், ஆற்றலும், ஒழுக்கமும் நிறைந்த உங்களது வாழ்க்கை எங்களுக்கு ஓர் உறுதுணை.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து''

கல்வியினால் உருவாகும் மனிதன் எத்தகையவராக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்ந்தீர்கள். கல்வி உலகில் நீங்கள் பதித்த சுவடுகள் என்றும் அழியாது. உங்கள் ஆத்மா இறைவனின் திருப்பாதத்தில் அமைதி பெறுவதாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**என்றும் நீங்காத நினைவுகளுடன்,**
**அன்பு மைத்துனன் - கந்தசாமி**
**அன்புச் சகோதரி- இராணிமலர் (ஸ்ரீலங்கா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Baby Acca"

You were the whole world to me since Pappa passed away. I looked upon you, not only as a Peria Acca but as a guardian, teacher, a lovely friend who provided all the support and courage in my life. Baby Acca was very affectionate,caring helpful and the kindest angel of our family. Even when you visited us in Australia in April 2001, you had a great heart, you wanted to cherish and provide all that help we needed.and make us happy. It was so wonderful to have Baby Acca and Athan so close to my family even though it was a short hol;iday. The saddest thing was you never told us about your illness. You had the strongest heart and dedication that you never wanted your siblings to suffer or know what you were suffering. Since June 2009, the time you were in hospital fighting for life, I had the tickets booked to visit you in New Zealand but circumstances held me back. It was a shame that I did not get that golden opportunity to see or talk to you but the only time I saw you was, after you left us for good. I think God is Great, at least I was able to witness your funeral and tender all my respects at the ceremony.

I pray that Almighty God for your soul to rest in peace.



**OHM MURUGA!!**

**With Deepest Love,**

**Appu(Kugatheesan, Australia)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dearest Baby Acca,

Remembering you as far back as 1970 when I first started at Mahajana, you were not only a Science teacher but a discipline teacher and then in 1985 as a sister-in -law as well. I always adored you and listened to you. You were so gentle, caring, warm and very helpful. I met you the second time when you and uncle visited us in Australia, this time I was proud to pronounce to everyone that you are my sister-in-law. You spent endless time in India to purchase those beautiful sarees for your niece's attainment ceremony. It was Tamil New Year and you made the sweetest pongal ever and you also taught us how to make sambar podi which the kids really enjoyed. I feel as though I have lost my eldest sister but definitely your beautiful memories will help us understand and guide us in facing the future. Ohm MURUGA!!

**With lots of love**

**Sivagamy**

**Australia**

Mami, We love you always, every moment shared with you, will be remenbered by us.

**Love, Praveena and Prasanth**

**Australia**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் அரவணைத்த அன்னை (எங்கள் சின்னம்மா)

தெல்லிநகர் துர்க்கை அம்பாள் ஆலயத்தை அண்டிய சூழலில் பிறந்து வளர்ந்து, எங்கள் சிறிய தந்தை, ஆசிரியர் திரு.சுந்தரராஜா அவர்களை வாழ்க்கைத் துணையாகக் கைப்பிடித்ததிலிருந்து எம்முடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. எடுப்பான தோற்றத்தைக் கொண்ட அவரின் மென்மையான பேச்சும், பழகும் முறையும் மற்றவர்களின் உள்ளத்தை மகிழ வைக்கும் ஆசிரியையாக இருந்த அவர், நான் சிறுவனாக இருந்த போது என் திறமைகளைக் கண்டு எனக்கு உற்சாகமளித்ததையும், அறிவுரை கூறியதையும் என்னால் மறக்க முடியாது. தெல்லிப்பழையிலிருந்து சங்கரத்தைக்கு வரும் அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்போம். மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு கண் கலங்கும் அவர் துன்பப்படுவோரின் துயரங்களைத் துடைக்கவும் தயங்குவதில்லை.

வட்டுக்கோட்டையில் சிறிய தந்தையின் குலதெய்வங்களான வயிரவர் கோவில், பத்திரகாளி அம்பாள் ஆலயம், அத்தியடி பிள்ளையார், அடைக்கலந் தோட்டக்கந்தன் ஆகிய ஆலயங்களின் வழிபாட்டிலும், தொண்டுகளிலும் முழு மனதுடன் ஈடுபட்டவர். பத்திரகாளி அம்பாள் ஆலய 3ம் திருவிழா, அடைக்கலந்தோட்ட கந்தனின் தைமாத கார்த்திகைத் திருவிழா என்பன இதற்குச் சான்றாகும்.

இறுதியாக 2003ஆம் ஆண்டளவில் பத்திரகாளி அம்பாள் ஆலய பங்குனி மகோற்சவத்திற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த போது அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. நல்ல ஆரோக்கியத்துடன் காணப்பட்ட அவர் இவ்வளவு விரைவாக இவ்வுலகை விட்டு நீங்குவார் என நாம் கனவிலும் நினைக்கவில்லை.

பகவான் சத்தியசாயி பாபாவில் மிகுந்த பக்தி கொண்ட அவருக்கு பகவான் மனித வடிவில் வந்து உதவிய சந்தர்ப்பங்களும் உண்டு பகவத் கீதையில் கண்ணன் சொன்னது போல ''உடலுக்குத் தான் அழிவே தவிர ஆத்மாவுக்கு அல்ல'' அதனால் அவரது ஆத்மா இறைநிழலில் சாந்திபெற பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

**ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி**

**பரமராசா குகராஜான்**
**சங்கரத்தை, வட்டுக்கோட்டை**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பேபி அக்கா

தொன்மையும், சிறப்பும் மிக்க ஆலயங்களையும், பிரபல்யமான கல்லூரிகளையும், வளம் மிகுந்த நிலத்தையும் கொண்டது எங்கள் தெல்லிப்பழைக் கிராமம். இங்கு கல்வியில் சிறந்த, சமயப் பற்று மிக்க செல்வக் குடும்பங்கள் பல உண்டு. அவ்வகையில் முருகேசபிள்ளை - சிதம்பரம் தம்பதிகள் குடும்பமும் ஒன்றாகும்.

எங்கள் தாய் செல்லம்மாவிற்கு வள்ளிப்பிள்ளை, சிதம்பரம் என இரு சகோதரிகள் இருந்தனர். 'பேபி அக்கா' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் தவமணி சுந்தரராஜா அவர்கள் முருகேசபிள்ளை-சிதம்பரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி ஆவார். இவர் கல்வி கற்கும் காலங்களில் கல்வியில் சிறந்து விளங்கியதுடன், ஆசிரியைப் பணியை ஏற்றுத் தமது ஊரிலுள்ள மகாஜனக் கல்லூரியில் நீண்டகாலம் பணி புரிந்தார். இவர் கண்டிப்பும், திறமையும் மிக்க ஆசிரியர். இவர் தனது சேவைக் காலத்தில் பாடசாலை வளர்ச்சி சம்பந்தமான சகல செயற்பாடுகளிலும் அதிபருடன் சேர்ந்து சிறப்பாகப் பணியாற்றினார். நாங்கள் அவரிடம் கல்வி கற்ற மாணவர்களே, எனவே எங்களுக்கு அவரிடம் பயம் கலந்த அன்பே இருந்தது. எங்கள் குடும்ப நிகழ்வுகள் சகலவற்றிலும் தமது பெற்றோருடன் சேர்ந்து முன்நின்று பாடுபடுவார்.

இவர் இறைபக்தி மிக்கவர். கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலயம், காசி விநாயகர் ஆலயம், துர்க்கை அம்மன் ஆலயம், நகுலேஸ்வர ஆலயம் என்பன இவர் அடிக்கடி சென்று வழிபடும் ஆலயங்கள் ஆகும்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தன் குடும்பத்துடன் வெளிநாடு சென்று அங்கும் தொழில் புரிந்து வந்தார். இடையில் தாய் நாட்டிற்கு வரும் போது உறவினர் வீடுகளுக்கும், தான் கற்பித்த பாடசாலைக்கும் விஜயம் செய்யத் தவறுவதில்லை.

அத்தகைய எங்கள் உடன் பிறவாச் சகோதரி, அவருக்கு ஏற்பட்ட நோய் காரணமாகத் திடீரென எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவரது பிரிவு எல்லோருக்குமே ஒரு பேரிழப்பாகும். இவரை இழந்து நிற்கும் கணவர், பிள்ளைகள் குடும்பத்திற்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**தவம், அப்பு, சிவம் குடும்பத்தினர்**
**தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மகாஜனக் கல்லூரி
## தெல்லிப்பழை
## J/Mahajana college, Tellippaliai

# மகாஜன அன்னையின் அஞ்சலி

கல்லூரியின் நூற்றாண்டு காலப்பகுதியில் ஏறத்தாழ 22 வருடங்கள் (1954-1976) அரும்பணியாற்றிய திருமதி.தவமணி சுந்தரராஜா அவர்களின் மறைவு துயரத்திற்குரியது. மகாஜனக்கல்லூரியின் வெளியீடுகளில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு ஆண்டும் மிக அதிக எண்ணிக்கையில் மாணவர்களை வைத்திய பீடத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்த காலகட்டத்தில் தாவரவியல் ஆசிரியராகச் சிறப்பாகக் கடமையாற்றியவர். இவர் கைகளினூடு வெளியேறிய எத்தனையோ வைத்தியர்கள் உலகெங்கும் மகாஜனன்களாக உள்ளனர் என்றால் மிகையாகாது.

மறைந்த திருமதி.தவமணி சுந்தரராஜா அவர்கள் பாடசாலையை விட்டு நீங்க அவருடைய இடத்தை நிரப்ப என முன்னாள் அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்களின் முயற்சியினால் தாவரவியல் ஆசிரியராக மகாஜனக் கல்லூரியினுள் நுழைந்த நான் அதிபர் என்ற வகையில் அன்னாருக்கு அஞ்சலி எழுதும் நிலையில் உள்ளமை காலத்தின் கோலம் போலும். அவரை எனக்கு நேரடியாக அறிமுகம் இல்லாவிட்டாலும் அங்கிருந்த ஆசிரியர்கள், மாணவர்களின் தகவல்களை வைத்து ஒரு சிறந்த, கண்டிப்பான, அன்பான, மாணவர்களுக்குப் பிடித்த ஆசிரியர் என்பதை அறிந்து கொண்டேன்.

நூற்றாண்டு விழா சபையினால் கௌரவிக்கப்பட வேண்டிய ஆசிரியப் பெருந்தகைகளில் அவருடைய பெயரும் இணைக்கப்பட் டுள்ளது. அமரத்துவம் அடைந்தாலும் அவர் கௌரவிக்கப்பட வேண்டியவரே. பாடசாலை வாழும் வரை மகாஜனன்களின் மனதில் உறைந்திருக்கும் திருமதி.தவமணி சுந்தரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பாடசாலையில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப்பெருமானை வேண்டி மகாஜன அன்னையினதும், பாடசாலை சமூகத்தினதும் இதய அஞ்சலிகள்.

அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரஞ்சலி

# திருமதி.தவமணி சுந்தரராஜா

தோற்றம்
07.07.1932



மறைவு
10.08.2009

பல்கலையும் பலதுறையும் பயின்றுபெரும் பதவிபெற
நல்வழிக லூட்டிஎமை நெறிப்படுத்திக் கல்விஎனுங்
கண்திறந்த பேராளர் கனகமணிப் பூதவுடலைக்
கண்நீராட் கழுவுவதோ வின்று.

## மகாஜனக் கல்லூரி
## பழைய மாணவர்கள்
## நியூஸிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A tribute to my long time dear friend Thavam

I feel quite privileged to have an opportunity to write a few words about my dearest & respected fellow teacher and friend Thavam. I was very shocked to hear the sad news on a Monday morning and found it hard to believe. As I gradually over came the sadness, I was able to realise that God had been gracious and spared her from further suffering. As we all know nothing is in our hands everything is preplanned when we are born. She had been fortunate indeed to have her loving relatives and friends during her illness proving how much they cared for her. According to our Hindu Custom she had been lucky to go on her final journey with "Poovum Pottum" which is considered a blessing to women.

I feel it was the whole hearted desire of her students that must have brought her to Auckland to spend some time with them before her final departure as well as give them a chance to express themselves and also partake in the final farewell.

During her stay in Napier I used to contact her over the phone. I was very happy she had come to Auckland and visited her and spent some time together reviving our old memories. It was a pleasure to entertain them at our home. I expected to spend more time on more visits but time did not permit it. Just a few months ago I heard of her illness and was shocked beyond words and visited her immediately but she as usual welcomed us with her sweet captivating smile which meant a lot to me. We spoke little but I was able to convey my feelings.

As a flash back I joined Mahajana in June 1958 and really feel proud of the period spent there which was most unforgettable and sort of a golden period in my life. The Mahajana staff was a family under the fatherly Principal Mr. Jeyaratnam. Loyalty, dedication, willing service and respect were some of the values in this friendly atmosphere. My memories of Mahajana would last for ever. It was then that I met this pleasant, friendly, lovely and lively lady, Thavamany with many admirable qualities. At lunch we met in Mrs. Navaratnam's class room. This gave a good opportunity to be together and develop our friendship. We were four maiden teachers and under her leadership we go out together after school on various occasions and of course we never missed a snack and coffee at Thamothra villas or an ice cream at Subas. It was great fun and gave us the chance to be unforgettable friends. I used to visit her home in Tellippalai and while



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

chatting admire how well she was able to rein her family guiding them for their future betterment. Jeganathan her cousin spent more time with them than in his own home. She was always willing to help and this was a great quality in her. The best way to find yourself is to lose your self in the service of others and that certainly applies to Thavam. She was indeed a true, loyal, loving friend.

As a born teacher she was dedicated, conscientious, responsible and a devoted teacher with great empathetic leadership. As for her teaching I need not say much for the proof of the pudding can be seen in the large number of her students in many parts of the world in various professions. She was equally involved in other activities sports, house mistress, girls unions, concert etc. As she was an approachable and compassionate lady, girls would easily approach her with their problems without hesitation. With the other science teachers she organised excursions which are an important part of education. Prize giving was a busy season for her. During the Golden Jubilee in 1960, she was the busy bee literally working day and late nights to make it a great success. The Jubilee celebrations brought much fame to Mahajana. The students fondly called her "missiamma". There is much more to say about her, but in short, I would say she was an outstanding pillar of Mahajana.

One fine day Mr Sundararajah came to Mahajana and with the help of Mr. Sathiyosatham had a glimpse of Thavam and was very impressed. The following day we came to know that he had given his consent to marry her – right choice indeed. Within months the wedding bell rang and very soon Mr. Sundararajah was part and parcel of Mahajana though he was a teacher at another school.

She was a proud mother of two loving, dutiful and caring children Renuga and Muruganujan. May God give her loving husband and the family enough strength, courage and faith to overcome this difficult period. Time would heal everything.

I am confident that Thavam's generosity and services will serve as an insurance for the family in the future.

**May her noble soul rest in peace**

**On behalf of Mahajana Staff and Old Students**
**Sundari Kandiah**
**Newzealand**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN MEMORY OF BELOVED TEACHER!

The Old Students' Association Canada is extremely saddened to hear the demise of our respected former teacher Mrs. Thavamany Sundararajah.

Mrs. Suntherarajah joined the staff of Mahajana College Tellippallai in 1954 after successfully passing her Bachelors of Science degree obtaining a First Class. She taught Biology in the Senior classes and Botany in the advanced level classes with dedication and commitment. She earned the respect of students and teachers by her genial ways and friendly deposition. It was not an unusual sight to see her advanced level students going to her house to have a friendly interaction with her in the evenings and during the weekends.

Mahajana College was a Grade I institution at the time she joined the tutorial staff and within a short span it was elevated to a Super Grade school due to the untiring efforts of a clan of young teachers led by Mrs. Thavamany Sundararajah. Her initiative and leadership was a source of inspiration to her colleagues in the science department which earned Mahajana, the reputation as the best school for students seeking admission to the Medical Faculty of the University. Students, not only from all parts of Jaffna but from eastern province as well as upcountry flocked to attend Mahajana College.

Besides being a very capable teacher Mrs. Thavamany Sundararajah took a very active role in various extra curricular activities of the school. She served with devotion as the teacher in charge of the girls union, secretary of the Old Students association, House Mistress and in several other capacities as and when the need arose.

The O.S.A Canada is fortunate to have had her as the Chief guest at Our Annual Dinner ten years back and still cherish the lovely address she delivered, about the obligation of old students to their alma-mater We express our heart felt condolences to the family and friends. It is an irreparable loss and we share the grief with them.

**May her soul rest in peace!!**

**Mahajana College**
**Old Student's Association**
**Canada.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவருடன் தவமணி



பிள்ளைகளுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரிகளுடன்



தெல்லிப்பழையில்
அமரரது இல்லம்





பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனவின் புகழினை உலகறியச் செய்ய உழைத்த பெரு நங்கை

1957ம் ஆண்டு மே மாதம்10ம் நாள் மகாஜனக்கல்லூரியில் நான் பதவி எற்ற முதல் நாள். காலையில் ஆசிரிய அறையுள் புகுகிறேன். யாருமே பரிச்சயமில்லாத முகங்கள். தலைநிறையப் பூவுடன் ஒரு பெண்மணி என்னிடம் வந்து, 'நான் செல்வி முருகேசபிள்ளை' என்று அறிமுகம் செய்கிறார்கள். சென்னை கிறிஸ்துவகல்லூரி வளாகத்தில் அவர் பரீட்சை எடுக்க வந்திருந்தபோது இரண்டொரு முறை பார்த்த ஞாபாகம் வருகிறது. பின்னர், மகாஜனக் கல்லூரியினுக்கு ஒரு விலங்கியல் ஆசிரியர் தேவையாக உள்ளது என அவர் எனது துறைத் தலைவர் பேராசிரியர் ஜோசுவாவிற்குக் கடிதம் எழுதியதை பேராசிரியர் எனக்குச் சொன்னதும் ஞாபகம் வருகிறது. 'நீங்கள் தாவரவியல் ஆசியரியர் தானே' என்றேன். 'ஆமாம்' என்றார் மலர்ந்த முகத்துடன். 'வாருங்கள் ஆய்கூடத்தினைக் காட்டுகிறேன்' என அன்பொழுக அழைத்து என்னை உயிரியல் ஆய்கூடத்திற்கு அழைத்துச் சென்று பார்க்க வைக்கிறார். குறுகிய நேரத்திலேயே பாடசாலை பற்றிய அத்தனை விபரங்களையும் பாங்காக எடுத்துச் சொன்னார். அன்று ஆரம்பித்த எமது நட்பு கால ஒடத்தில் கரையவில்லை. மேலும் மேலும் வலுப்பெற்றது. கடைசி வரை நிலைத்து நின்றது.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கெட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை-( குறள்- 789)

என்பது வள்ளுவன் குறள். இதன்பொருள்

'மனவேறுபாடு கொள்ளாமல் தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் துணை நின்று நண்பனைத் தாங்குவது தான் நட்பின் சிறப்பாகும்.'

இக்குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்து நட்பின் பெருமையை நிலை நாட்டியவர் திருமதி சுந்தரராஜா அவர்கள். அவரது அனுசரணைமிக்க ஆலோசனை, அன்பு நிறைந்த ஆதரவு, அவசியம் எற்படும் பொழுது தரும் அரவணைப்பு என்னைப் பலசந்தரப்பங்களில் தூக்கி நிறுத்த உதவின என்பது நிசம்.

1954ஆம் ஆண்டினிலே சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் தாவரவியல் பட்டதாரியாக முதல் தரத்தில் சித்தி பெற்ற அவர்கள் மகாஜனக்கல்லூரியின் அதிபர் ஜெயரத்தினம் அவர்களால் உயர்தரமாணவர்களுக்குத் தாவரவியல் கற்பிப்பதற்காக நியமித்த முதல் பெண் விஞ்ஞானப் பட்டதரியாவதுடன், முதல் இலங்கையரும் ஆயுள்ளார். ஏனைய விஞ்ஞான ஆசிரியர்கள் யாவரும் அச்சமயத்தில் இந்தியர்களாகவே இருந்தனர். பெரும்பாலோர் மலையாளிகள். ஆகவே மாணவர்கள் அவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. இவர் ஆசிரியப் பணி ஏற்றது முதல் நிலைமையில் பெரும் மாற்றம் எற்பட்டது. மாணவ மாணவிகள் தமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு ஒரு ஆசிரியையைக் கண்டனர். அவரது கண்ணியமான நடத்தை அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

இவரைத் தொடர்ந்தே இலங்கையினைச் சேர்ந்த விஞ்ஞான ஆசிரியர்கள் பாடசாலையில் வந்து சேர்ந்தனர்.

செல்வி முருகேசபிள்ளை அவர்கள் பாடசாலையில் ஆசிரியராகச் சோர்ந்த பொழுது உயர்தர மாணவர் வகுப்புக்கள் சிறியவையாகவும் 10-12 மாணவர்களைக் கொண்டதகவுமே இருந்தன. ஆகவே உயர்தர மாணவர் வகுப்புகளுடன் 9ம் 10 ந் தரங்களில் தாவரவியல், உயிரியல் போன்ற பாடங்களையும் போதித்து வந்தார்.

இவரைத் தொடர்ந்து பாடசாலையில் ஆசிரியர்களாகச் சேர்ந்த ஒரு இளைஞர் குழு அர்ப்பணிப்புடன் இவர் தலைமையில் சேவையாற்றியதன் விளைவாக மகாஜனா அதி வேகமாக முன்னேறியது. 10- 12 மாணவர்கள் தொகை என்ற நிலை மாறி 150- 200 என்று வளர்ந்ததோடல்லாமல் உயிரியல் பாடம் கற்பதற்கு ஏற்ற இடம் மகாஜனா என்ற பெயரையும் ஈட்டிற்று. அதன் பெறுபேறாக வெறும் தெல்லிப்பழை மாணவர்களுக்கு மாத்திரமே மகாஜனா என்ற நிலைமாறி திருகோணமலை மட்டகளப்பு, மலையகம், தீவுகள் என அனைத்திலங்கைப் பாடசாலையாகியது. பரீட்சைப் பெறுபேறுகளும் பிரமிக்க வைத்தன.

செல்வி முருகேசபிள்ளையாக இருந்தவர் 1960ஆம் ஆண்டினிலே வட்டுக்கோட்டையினைச் சேர்ந்த நாகலிங்கம் சுந்தரராஜாவைத் திருமணம் செய்தார். ஆசிரியரான திரு சுந்தரராஜா இடமாற்றம் பெற்று மகாஜனவுக்கே ஆசிரியராகி விட்டார். இருவருமே பாடசாலைக்காக அரும்பணியாற்றினார்கள் என்றால் மிகையாகாது.

திருமதி சுந்தரராஜா தலைசிறந்த ஆசிரியையாக மட்டுமல்லாது மிகத் திறமைமிக்க தலைமைத்துவப் பண்புகளையும் கொண்டவராக அமைந்திருந்தார். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே மிக நெருக்கமான ஒரு உறவினை ஏற்படுத்தினார். வகுப்பிலே கற்பிக்கின்ற போது எத்தனை கண்டிப்புடன் செயற்படுவாரோ அத்தனை நட்புடமையுடன் வகுப்புக்கு வெளியே மாணவர்களுடன் பழகுவார். இதனால் அவருக்கும் மாணவருக்கும் இடையே உள்ள தூரம் மிகக் குறைவாக இருந்ததனால் மாணவ மாணவியர் சிறப்பாக உயர்தர வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் தமது சொந்தப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஒரு நண்பர் வாய்த்துள்ளார் எனக் கண்டு ஆனந்தப் பட்டனர்.

அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் ஒரு அற்புதமான காரியக்கட்டி. யார் யார் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்களோ அவர்களிடம் நிறையவே பணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைப்பார். அதிபர் சொல்வதை வேதவாக்காகக் கொள்பவர் திருமதி சுந்தரராஜா ஆகவே அவர் இட்டபணிகள் அத்தனையையும் சிறப்பாகச் செய்துள்ளார்.

ஜி.சி.இ ( சாதாரண) மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கான விண்ணப்பப் பத்திரம் தயாரித்தல், பரீட்சை நேர அட்டவணை வழங்கல், பின்னர் பரீட்சை முடிவுகள் வந்ததும் மாணவருக்குத் தெரிவித்தல், சித்தி விவரங்கள் என அத்தனை வேலைகளும் அவர்கள் தலையிலே. அத்தனைக்கும் தனது பாடங்களை கற்பித்தபடிதான் இந்த வேலைகளை மாலை நேரங்களிலும் சனி ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஒய்வு ஒழிச்சலின்றிச் செய்தார்.

அடுத்த பாரிய பொறுப்பு? பாடசாலை, கலவன் பாடசாலை என்றமையால் எந்த விதமான அவப்பெயரும் பிள்ளைகளின் நடத்தையினால் ஏற்படப்படாது என உணரந்த அதிபர் ஒழுங்காட்சிக்கு என ஒரு குழுவினை நியமித்து அதில் திருமதி சுந்தரராஜாவை அங்கத்தனராக்கியதுடன், மாணவிகள் மன்றத்தின் பொறுப்பாளராகவும் இவரை நியமித்தார். கட்டுப்பாடு, அதே சமயம் கண்ணியம், அவரது நற்பண்பு. ஆகவே மாணவிகளைச் சுலபமாக வழி நடத்தினார். யாழ்குடாநாட்டிலேயே கலவன் பாடசாலைகளில் பல்லோரது மதிப்பிற்கும் பாராட்டுக்கும் பாத்திரரானது மகாஜனா!

பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், நிறுவியவர் தினமும் ஜூன் 24ல் வருடாவருடம் நடைபெறும்.அதற்கான நிதி சேகரித்தல் , பரிசுப் பட்டியல் தயாரித்தல் பின்னர் பரிசளிப்புத் தினத்தில், அத்தனை பரிசுகளையும் மாணவர்களுக்கு வழங்கல், எனும் பாரிய நிகழ்ச்சி அவர் முகமலர்ச்சியுடன் ஆற்றும் வருடாந்த நிகழ்ச்சி.

அவர் நீண்டகாலமாக அருளம்பல இல்லத்தின் பொறுப்பாசிரியையாகவும் இருந்நு மாணவர்களோடு மாணவராக இல்லப் போட்டிகளில் அத்தனை ஈடுபாட்டுன் பங்கு பற்றியதை நான் என்கண்களால் கண்டு வியந்துள்ளேன். அவரது உற்காசமிக்க ஈடுபாடு ஒவ்வொரு போட்டியின் போதும் மாணவர்ள் தமது உச்சக் கட்ட உழைப்பினையும், திறன்களையும் பெறுவதற்குக் காரணமாகின. உயர்தரமாணவர் மன்றத்தின் இராப்போசன விருந்தின் போதும் அவர் ஈடுபாடு நிறைந்த உழைப்பு சொல்லும் தரமன்று.

காலத்துக்குக் காலம் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரா கவும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும், ஆசிரியர் குழாத்தின் பொருளாளராகவும். அவர் உழைத்தார்

இன்னும் சொல்வதானால் மகாஜனவில் அவர்கற்பித்த 21 வருடங்களும் அவர் கைபடாத இடமில்லை, அவர் ஆற்றாத பணியில்லை, அவர் கவராத மாணவர் மனதில்லை.

**பொ. கனகசபாபதி**

**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Great Teacher And A Successful Organiser

Dear Mr. Suntharararajan and Children

We hasten to convey to you our deepest sympathies on the demise of Thavamany Suntharararajah; Mahajana diaspora mourns her passing away. She lived a full life adored by you and by your children, her devoted brothers, her relatives and above all, her students. A loving wife and mother she was, she endeared herself to her brothers and sisters and all her relatives and her students through her deep affection and devoted sense of service towards them. Mahajana and Mahajanans will always remember her as a great teacher,administrator, disciplinarian and a very successful organiser of all major college events. Proudly,she can be acclaimed as one of the Architects of Mahajana's Golden Age and Renaissance of the nineteen fifties and sixties.

Our thoughts and Prayers are with you and your children during these days of your grief and pain.We quote these lines of poet, John L. McCreery which we pray will find some comfort and peace of mind for you and your children .

Aum Shanthi ! Shanthi ! Shanthi !
"There is no death ; the stars go down
To rise upon some other shore
And bright in Heaven's jewelled Crown
They shine forever more"

**Poet, John L.McCreery**

**Mr.& Mrs. M.Karthigesu**
**Canada.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Teacher With Dignified Personality

" It is with great sadness I received the news of the death of Mrs Thavamani Sundararajah who was my Botany Teacher for the Advanced Level years in 1965/66 at Mahajana College Tellipallai, Sri Lanka.

Mrs Sundararajah was an excellent teacher who devoted more than ample time to see to the needs of every student. Her contribution to teaching along with the rest of the staff at Mahajana was witnessed by a large number of students entering the Universities in Colombo and Kandy especially to the medical schools, year after year. I was one who had the privilege. of learning under Mrs Sundararjah who was a kind individual, always had a smile and treated the students with respect and dignity. She participated in the extra curricular activities of the school and with her husband contributed to the education of students from the region and from far and wide. Her contributions to education and her dignified personality will be always remembered.'

**Professor Sir Sabaratnam Arulkumaran**
**President, Royal College of Obstetricians & Gynaecologists, UK &**
**Professor & Head of Obstetrics & Gynaecology, St George's University of London**

Dear Mr Suntharrajah and children,

Please accept our deepest sympathies and heartfelt condolences.We are deeply troubled to hear the death of Mrs Sunthararajah who was our dearest teacher at Mahajana College.

The Board members of Mahajana College Foundation convey sympathies to Mr Sunthararajah, children and to her brothers and sisters.

T.P Murugiah
T.Lankaneason
S.Jeyavarman

on behalf of the Board

**The Mahajana College Foundation for Educational Development**
**36, Sagara Road, Colombo 4, Srilanka**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to our "Guru" Mrs.Sundarajah

Mrs.Sundarajah was more than a teacher in botany, she was my class teacher in my ordinary and advance level classes. She showed the light and guided us to get in to the present positions in our lives. She never had favorite students and treated every body alike. She also had the ability to pick out the talented. She gave us the necessary support and encouragement to correct our weaknesses.

Her teaching methods are unique for self. She encouraged self training and never spoon fed us which helped greatly in our higher studies. She emphasized the importance of English during her teaching, used the English terms although the medium of instruction was Tamil which was appreciated by all of us in the university.

She was in Mahajana during its golden period. She always contributed towards the success of every school function.

Mrs.Sundarajah was a strict disciplinarian and was concerned about the dress code of the students.

Although she migrated to New Zealand but her heart and soul was in Sri Lanka especially with her Mahajanans. She always made a point to meet her student and their families during her visits to Sri Lanka.

It certainly is a terrible shock to hear that our teacher, one of the pillars of our college is no more but she will always be in our hearts for ever.

The only way to console our mind is to remember her in our daily prayers for her to attain "Mokksham"

**Dr.K.Satgurunathan,**
**M.B.B.S, M.D**
**Consultant Dermatologist**
**National Hospital of Sri Lanka.**

*சாயியின் குரலும் வள்ளுவர் குறளும்*

**End of Education is Character (Baba)**

**கல்வியின் நோக்கம் ஒழுக்கம் (பாபா)**

கல்வி ⟶ ஒழுக்கம் ⟶ விருப்பம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலாள் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் எனக்கு ஆசிரியை மட்டுமல்ல தாயும் கூட....

ஒவ்வொருவரினதும் வாழ்க்கையில் திருப்பங்கள் பலவிதமான காலகட்டங்களில் ஏற்படலாம். அவை ஒரு நாளிலோ, ஒரு சில நிமிடங்களிலோ, ஏன் ஒரு தற்செயலான சம்பாஷணையினாலோ ஏற்படலாம். ஆம், என்னுடைய வாழ்க்கையிலும் கூட ஒரு எதேச்சையான சம்பாஷணையால் ஏற்பட்ட திருப்பம் தான் என்னை உயர்ச்சிக்குக் கொண்டு சென்றது எனலாம்.

'மூதூர்' எனும் மிகவும் பின்தங்கிய கிராமத்திலே பிறந்து அங்குள்ள பாடசாலையிலே கல்விகற்று, சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த வேளையிலே, எனது அப்பா எனக்கு உயர்கல்வியைப் பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக ஏங்கிக் கொண்டிருந்த காலமது. மூதூர் 'பஸ் ஸ்டாண்டிலே' அப்பாவுக்குப் பழக்கமான கூட்டுறவு அதிகாரி திரு.நடராஜா என்பவர், அவருடன் கதைக்கும்போது ஒருநாள் அப்பா என்னைப் பற்றி அவரிடம் கதைத்தார்......

திரு.நடராஜா அவர்கள் தன்னுடைய சகோதரரும், அவரது மனைவியும் யாழ்ப்பாணத்திலே கற்பித்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டு ''அங்கு உங்கள் மகனை அனுப்பிப் படிக்கவைத்தால் என்ன?'' என ஆலோசனை வழங்கினார்.

இப்போது விடயம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு முடிவுக்காகக் காத்திருந்தார்கள். மேற்குறித்த சம்பாஷணைதான் என் வாழ்க்கையில் புதுவழியைப் பிரவாகித்தது. இப்போது நான் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கின்றேன். இன்றுபோல் தொலைத்தொடர்பு வசதிகளோ, இன்டர்நெட் வசதிகளோ இல்லாத காலமது. இறைவன் ஒருவனையே நம்பி யாழ்ப்பாணம் வந்திறங்கிய எனக்கு அங்கு காத்திருந்தது வரவேற்பு.

திரு.சுந்தரராஜா, திருமதி சுந்தரராஜா தந்தைக்குக் தந்தையாகவும், தாய்க்குத் தாயாகவும் என்னை உபசரித்தார்கள். வகுப்பறையில் மாத்திரமன்றி தனிப்பட்ட விதத்திலும் என்மீது அக்கறை செலுத்தினார்கள். எனது கல்வியிலும், நலன்களிலும் அதீத பங்களிப்பைச் செய்தார்கள். நான் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி மருத்துவனாக மாறும்வரை சகல வழிகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இன்று இரத்தினபுரி நகரிலே ஒரு தனியார் வைத்தியசாலைக்கு உரிமையாளனாய் வாழ்கின்றேன் என்றால் அதில் பெரும்பங்கு அவர்களுக்குண்டு. காலங்கள் பலவிதமாக மாறினாலும், கடல்கடந்து சென்றாலும், எமக்கிடையிலான உறவு முடிந்துவிடவில்லை. தூரதேசமென்றாலும் தொலைபேசி மூலமாக தொடர்புகள் உறவைப் பலப்படுத்திக் கொண்டன. தாய்நாட்டுக்கு விடுமுறையில் திரும்பினால் கொழும்புக்கு ஓடோடிச் சென்று பார்த்துவிட்டுத்தான் அடுத்த மூச்சை விடுவேன்.

இத்தனைக்கும் எனது மனதில் நீங்கா இடம்பிடித்த நீங்கள் இந்த தற்காலிக உலகைவிட்டு நீங்கியது என்னைப் பொறுத்தமட்டில் ஒரு பேரிழப்பு...

இதனை விவரிக்க வார்த்தைகள் மறுக்கின்றன. அவர்தன் பிரிவால் வருந்தும் கணவர், பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறுகின்றேன். இவை ஒரு சில வார்த்தைகள் மட்டுமே.......

**இங்ஙனம்**

Dr.A.J.Jameel
Aloka Private hospital
Ratnapura
Sri Lanka.

இறைவனிடம் பக்தி செலுத்தும் முக்கியமான காரியத்திற்கு நம்பிக்கை மிகவும் அவசியம். அப்படி ஒரு முழு நம்பிக்கையுடன் ஆலயத்திற்குப் போய் இறைவனை அணுகி நமது நோயோ, கஷ்டங்களோ தீர வேண்டும் என்று கேட்டுக் கொண்டால் நிச்சயமாக அதற்கு நல்ல பலன் கிடைக்கும். அப்படி நம்பாவிட்டால் பலன் கிடையாது.

~பாபா~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உயர்ந்த உத்தமி

தெல்லிப்பழையில் உயர் குடும்பத்தில் உதித்து, வட்டுக்கோட்டையில் உயர் குடும்பத்தில் புகுந்து வாழ்ந்த உத்தமியே அண்மையில் அமரராகிய திருமதி தவமணி சுந்தரராஜா அவர்கள். அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தவர்களில் யானும் ஒருவன். பிறந்தவர் அனைவரும் என்றோ ஒருநாள் இறப்பர் என்பது உலக நியதி. இதனை நன்கு அறிந்து தெரிந்து இருந்த போதிலும் எம்முடன் நன்கு பழகியவர்களில் ஒருவர் இறக்கும் போது எம்மால் வேதனை அடையாது இருக்க முடியாது. அது தவிர்க்க முடியாத ஒன்று.

திருமதி.தவமணி சுந்தரராஜா அவர்களும் யானும் ஒரே காலத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஒன்றாக கற்பித்தோம். அவர் உயர்ந்த உள்ளமும், பரந்த நோக்கும் கொண்டவர். அவருடைய உயர்வுக்குக் காரணம் அவரின் செயற்பாடேயாகும். இதனை வள்ளுவர்

**''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்.**
**கருமமே கட்டளைக் கல்''**

என்ற குறளில் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். இவர் கல்லூரியில் கற்பித்த காலத்தில் தொடாத துறைகளும் இல்லை. இவர் தொட்டுத் துலங்காத துறைகளும் இல்லை எனலாம்.

இவர் உயர் வகுப்புகளில் உயிரியல் பாடத்தைத் திறமையுடன் கற்பித்து மாணவர் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்வடையக் காரணராக இருந்தார். கற்பித்தல் துறையுடன் மட்டும் நின்று விடாது கல்லூரிப் புறமுயற்சிகளிலும் முக்கிய பங்கெடுத்துக் கல்லூரியின் புகழுக்கு உதவி உள்ளார். கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தில் இணைச் செயலாளர்களில் ஆசிரியர் பிரதியாகப் பல ஆண்டுகள் சிறப்பான பணிபுரிந்தார். கல்லூரி ஆசிரியர் சங்கத்திலும் முக்கிய பதவிகள் வகித்துச் சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவினார்.

ஆண்டு தோறும் நடைபெறும் கல்லூரிப் பெருவிழாவாகிய பரிசளிப்பு விழாவில் பரிசுக் குழுவின் பொறுப்புகளை ஏற்று பல ஆண்டுகள் பணிபுரிந்தார். பெண்பிள்ளைகளின் ஒழுக்கத்திற்குப் பொறுப்பாசிரியராக அரும்பணி ஆற்றினார். அதிபர், ஆசிரியர், மாணவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருடனும் அன்பாகப் பழகி அனைவரின் மதிப்பையும் பெற்றார். உயர் தர மாணவர் மன்றம், விஞ்ஞான மன்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பணிபுரிந்தார்.

**''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு''**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்தார். இவரின் உயர்வுக்குக் காரணம் இவரின் உள்ளமாகும். சிறந்த நல்ல கணவரைப் பெற்று நிறைவாக நன் மகளையும் மகனையும் பெற்றுப் புகழுடன் வாழ்ந்தார் இவரின் கணவர் திரு.நா.சுந்தரராஜா அவர்களும் சிறந்த ஆசிரியராக மகாஜன கல்லூரியிற் பணிபுரிந்தார். கற்பித்தலுடன் கல்லூரிப் புறமுயற்சிகளிலும் பங்கேற்றுத் திறம்படப் பணிபுரிந்தவர். கல்லூரிப் பரீட்சைக் குழுவின் பொறுப்பாசிரியராக இருந்து இவர் சிறப்பாக பணி புரிந்தார். இவர்கள் இருவரும் கல்லூரியில் எழுந்தருளி அருளாட்சி புரியும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜர் ஆலயத்தில் கார்த்திகைத் தீபவிழாவினைப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயற்பட்டனர். கல்லூரியை விட்டு விலகிய பின்னரும் இப்பணியைத் தொடர்ந்து செய்து வந்தனர்.

இவரை இழந்து தவிக்கும் கணவர், பிள்ளை மற்றும் உறவினரைத் தேற்ற வல்லவர் யாவர்.

**''வகுத்தான் வகுத்த வகையார்போல் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்தல் அரிது''**

என்றார் வள்ளுவர்.

அக்குறட்பாவை எண்ணி ஆறுதல் அடைவோம். தேறுதல் கூறுவோம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திப்போம்.

**ச.விநாயகரத்தினம்**
**ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்,**
**(முன்னாள் ஆசிரியர் மகாஜனக் கல்லூரி)**
**பன்னாலை, தெல்லிப்பழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய திருமதி.த.சுந்தரராஜா

திருமதி த.சுந்தரராஜா 10.08.2009 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் மிகவும் வேதனை அடைந்தேன். மகாஜனவில் அவருடன் ஏற்பட்ட தொடர்புகள், செயற்பாடுகள் எல்லாம் மனத்திரையில் ஓடத் தொடங்கின. அவருடன் பழகியவர்களுடன் தொடர்பு கொண்டு துன்பத்தைப் பகிர்ந்து கொண்டேன்.

1962ம் ஆண்டு மகாஜனக் கல்லூரியில் யான் பணிபுரியச் சென்றேன். அங்கு எமது அயலூரவரும், இராமனாதன் கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி த.சுந்தரராஜா அவர்கள் இன்முகத்தோடு என்னுடன் அளவளாவியது இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது. நாளடைவில், அவர் எல்லோருடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும், பழகுவதுடன் வழிகாட்டியாகவும் செயற்பட்டதையும் கண்டேன்.

மகாஜனக் கல்லூரியின் பொற்கால வரலாற்றில் இவருக்குத் தனி இடம் உண்டு. பாடசாலைச் செயற்பாடுகள் அனைத்திலும் விருப்புடன் உற்சாகமாகப் பங்கு கொண்டவர். அத்துடன் பாடசாலைச் சமூகத்தவரையும் தன்னைப் போன்று பங்குபற்ற ஊக்குவித்தார். அதிபர், ஆசிரியர்கள், மணவர்கள், சிற்றூழியர்கள், பழைய மாணவர், பெற்றோர் எல்லோருடனும் அன்பாகப் பழகி, எல்லோருடைய அன்பிற்கும், நன்மதிப்புக்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

உயர்தர வகுப்புகளில் தாவரவியலைச் சிறப்பாகக் கற்பித்து பல வைத்தியர்களையும், உயிரியல் பட்டதாரிகளையும் உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. பாடசாலையில் அவருக்கு தனிமதிப்பு இருந்தது. உயர்தர வகுப்பில் கற்பித்த முதற் பெண் ஆசிரியை. பாடசாலை மாணவியர் சங்கத் (Girls' Union) தலைவியாக இருந்து அவர்களை வழி நடத்தியவர். பெண்பிள்ளைகளின் ஒழுங்குப் பொறுப்பாசிரியராக இருந்து மாணவியரைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், தண்டித்தும் நல்வழிப்படுத்தினார். பழைய மாணவர் சங்க இணைச் செயலாளராகவும், பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஆசியர் சங்கம், விஞ்ஞானமன்றம் ஆகிவற்றிலும் குழு உறுப்பினராகத் துடிப்பாக செயற்பட்டார்.

பாடசாலைப் பரிசளிப்பு விழாப் பொறுப்பாசிரியராக இவர் கடமையாற்றிய போது அவருடன் யானும் அக்குழுவில் பணியாற்றினேன். கலைவிழா, கண்காட்சி, இராப்போசன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து, விளையாட்டுப்போட்டி, கோவில் திருவிழா போன்ற பாடசாலையின் எல்லா செயற்பாடுகளிலும் அவர் பங்களிப்பு இருந்தது.

அக்காலத்தில் பாடசாலை விழாக்கள் மாலையில் தொடங்கி இரவில் முடிவடையும். அப்போதெல்லாம் நாங்கள் ஒருமித்து வீடு செல்லும்போது இவர் துணைவருவார். பாடசாலைத் தேவைகளுக்கோ, எமது சொந்தத் தேவைகளுக்கோ ஒருமித்துச் சென்று பொருட்கள் வேண்டுவோம். அப்போது எங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், பாதுகாவலராகவும் இருந்தார். அவரைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம். இவரது அன்புத் துணைவர் திரு.நா.சுந்தரராஜா அவர்களும் எம்முடன் அன்பாகப் பழகியவர். அவர் நோய் வாய்ப்பட்டிருப்பதை அறிந்து வருந்துகின்றோம்.

தனது செல்வ மக்கள் ரேணுகா, அனுஜன் அவர்களின் செயற்பாடுகள் பற்றியும் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உறவினர் பற்றியும் ஆசியர்களுடன் பகிர்ந்து கொண்டார். இதனால் எங்கள் தொடர்பு மிகவும் நெருக்கமாக இருந்தது. பாடசாலைச் சமூகத்தவரின் சுக துக்கங்களில் எல்லாம் சுந்தரராஜா தம்பதிகள் பூரணமாகப் பங்கு பற்றினார்கள்.

அவர்கள் வெளிநாடு சென்றதன்பின், நாட்டுப் பிரச்சினை காரணமாக எமது தொடர்புகள் இல்லாது போனாலும், உறவினர்கள் மூலம் அறியும் வாய்ப்பு இருந்தது. இறுதியில் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதை அறிந்து மனம் கலங்கினோம். அவர் இறைவனடி சேர்ந்து விட்டார். பழகியவர் மனதில் என்றும் வாழ்வார்.

**''நல்லாரைக் காண்பதும் நன்றே**
**அவரோடு இணங்கி இருந்ததுவும் நன்றே''**

எனக் கூறி எம்மை ஆற்றிக்கொள்வோம்.

இறுதியாக அவரது அன்புக்குரிய கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர் குடும்பங்கள் எல்லோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

**திருமதி.சரஸ்வதி கனகேஸ்வரன்**
**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - மகாஜனக் கல்லூரி)**
**மல்லாகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Late Mrs Thavamany Sundararajah

I was a student in the GCE (A level) at Mahajana College, Tellippalai during the year 1956/57 when I saw a change in the way the teachers reacted with students in the senior classes. We could feel a breeze of fresh air sweeping the class rooms with young graduates who have just come out of university as tutors and students being treated as equal adults entitled to their opinions and feelings.

Miss Thavamany Murugesapillai had returned from Madras Christian College and took up teaching science to senior students. Her special subject was Botany and she taught the subject with such ease and expertise that the subject became an easy one for most students. The lectures and practical classes were very relaxed and those sessions were highly popular among students .The results at (Q) and (A' levels were equally good in that subject Swamy Vivekananda said what young students need from teachers is not lessons but guidance and encouragement to kindle their inherent ability to learn new things. Miss Murugesapillai stood out among the female teachers as a liberal minded yet very decent mannered teacher liked by all the students and teachers alike. She took a great deal of interest in extracurricular activities and inter house competitions and sports and would leave schools quite late each day. She was a source of invaluable support to the then Principal Mr.T. T. Jayaratnam.

Later she married Mr Sundararajah and even after I went to medical school in Colombo our friendship remained strong. I used to visit her in her home in the company of a very dear friend Mr Thuraisingam who later married Miss Poomany a sister of our teacher. It amazing how she used to keep up to date with regard to news about her students until her last days. Whenever we had occasion to meet she would enquire about the welfare of other students who may have been known to me. When I met her in Auckland during April 2008 in her residence she eagerly enquired about the common friends in London and Srilanka.

She was very pleasant in her ways and avoided confrontation and ill feeling. She had abundance of good will among all the past students and eo teachers. She led an exemplary life and had two lovely children a daughter and son who are very successful in their chosen professions. It is with great difficulty that Ishall attempt to console Mr Sundararajah who is suffering from ill health. It is comforting that he lives with his daughter in Newzealand.

I shall pray to God that tha Aatma of Mrs Sundararajan rests in peace.

**Ohm Shanthi Shanthi**

**Dr. S. Navaratnam FRCP**
**5 Windy Hill Hutto,Brentwood**
**Essex,CM13 2HF, Uk.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அம்மையே!

அன்றொருகாலம் அன்பால் அணைத்து
மகாஜன என்னும் மாண்புறு மண்ணில்
மனமுவக்க மதிமயங்க வாழ்ந்தகாலம்
என்றும் எம் நினைவிலுண்டு அம்மையே.

உற்றார் உறவினர் இல்லாத ஊரில்
பற்றாக நின்ற பாங்கை எவ்வாறு உரைப்பேன்
நாம் இருக்கேன் உன் துணைக்கு என
அன்று கூறினாய் எம் அம்மையே

அகமொரு அழகு குரலெனில்
அதனிலும் மென்மை
என்று வருவார் எனக் காத்திருப்போம்
என்றும் நினைவிலிருக்கும் எம் அம்மையே

எங்கு வந்து உதித்தாய் அன்னையே
எல்லோர் வாழ்விலும் பங்கு பெற
எப்பொழுதும் எம் நினைவில் உள்ள
என்றும் நினைவிலிருக்கும் எம் அம்மையே

ஆசிரியராகி அன்னையாகி
அணைக்கும் கை எனதென
ஆட்கொண்ட அன்னையே
ஆசிபெற்றோம் உம்மிடம்!

**கிருஷ்ணானந்ததேவி பரமேஸ்வரன்,**
Australia.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றுதற்குரிய பேபி அக்கா

பிறப்பதுவும் இறப்பதுவும் மானிடநியதியென்று
மற்றவர் கூறக்கேட்டிருந்தோம் - ஆனால்
பேபி அக்காவும் கொண்டார் மீளாத்துயிலென்றறிந்து
துக்கத்தில் துடித்துப் போய்விட்டோம்.

ஒருதாய் மணிவயிற்றில் உதிக்காதபோதிலும்
உதவிகள் பல புரிந்தீர்கள் எமக்காக - என்றும்
முறுவல் பூத்தமுகம் எம்மனக்கண்ணில் இன்றுவரை
நிஜம்போல் நிழலாய் ஆடுகின்றன.

மாநிலம் புகழ்ந்த மகாஜனவிலன்று மாண்புறும்
ஆசானாய் அணிசெய்தீர்கள் - கண்ணியத்துடன்
கல்லூரி ஒழுங்கினைக்காத்த உங்களாளுமை
கண்டு இந்நாள்வரை வியந்திருக்கின்றோம்.

கடமைகள் முடிந்ததென களிப்புற்றிருந்த உங்கள் மீது
கடவுள் கண்வைத்தார் போலும் - நோயில்
சோர்ந்திருந்த இமைகள்தனை பரிவுடன்தொட்டு
தன்கரம் கொண்டு மூடிவிட்டார்.

வாழ்வாங்கு வாழ்ந்து மண்ணுயிரில் சிறந்து
விண்ணெய்திவிட்ட ''பேபி அக்கா'' - பரம்பொருளாம்
சிவனவனின் பேரின்பவெள்ளத்தில் நீக்கமற
நிறைந்திருக்க பிரார்த்திக்கின்றோம்

லோகநாதன் (அப்பு)
குடும்பத்தினர்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Dear Teacher

Our TEACHER is one of those who will continue to stay in the minds and lives of many. As an individual and as a teacher she has touched the hearts and souls of many students. She was very warm, energetic, supportive and had a very positive attitude in all her dealings. Wherever and whenever she appeared in a scene her presence gave a feeling that SHE was the guiding light. In fact she had a lead role in my life too, by changing the course of my studies, in my marriage proposal and enriched my life in many ways. In the golden jubilee celebrations of our college in 1960 she contributed a lot and played a prominent role in organizing the science exhibition and made it a success. At that time we felt that she greeted every problem with courage, firmness and supportiveness.

She had conservative ideas and met her challenges with grace and confidence. This, with her kind and generous heart, added with her pleasing personality, was a great asset in solving problems faced by girl students of that time.

She was a GREAT LADY in every respect. We thank GOD for having given her to all of us to share her love, affection and wisdom when we were growing up.

WE ALL LOVE YOU OUR DEAR TEACHER.

**Arumugam Mahendran,**
**Washington, USA.**

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appreciation - Mrs.Sundararajah

We are all saddened by the loss of Mrs.Sundararaja.Our condolences to the family,the students and teachers.Her contribution to Mahajana College and its student body is enormous. I was fortunate to be a student of Botany during those golden years.A proud era cherished by all my contemporories.Her self-less contribution in academics in Mahajan College has been responsible for the creation of large number of outstanding professional and scientists and academicians.Her loss will be felt by Mahajanans across the globe.

**K.Shanmugasunderam MBBS FACC**
**CALIFORNIA**
**USA.**

# Teacher With Charismatic Personality

I have known Thavamany Sundrajah since my time at Mahajana College as an A level student from 1962-1965. She was very helpful to all of the students and inspired many of us in our academic and extra-curricular activities at our school; she was instrumental in my own progress during my time there. She had a charming, charismatic personality and a positive attitude towards life. She made special effort to be friendly and speak to everyone, even students not in her class. She treated everyone equally, with respect and dignity. She taught us not only biology, but also about how to lead a positive and meaningful life. She has touched many lives. We will miss her.

**Peter Roffey**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAYING GOODBYE TO A DEAR FRIEND

With sadness and heavy hearts we say goodbye to our dear friend Thavamani. Our friendship was deeply rooted into the second generation, and now we see that the third generation has become "relatives". My parents (Vairavapillay family) and Thavamnai's parents (Murugesapillay family) were close family friends, and the friendship continued on with us.

Thavamani was a well admired and respected teacher at Mahajana College (Tellippallai, Sri-lanka). She helped many of her students become successful in their chosen profession. With her high moral values, and as a source of inspiration, she was a role model for her students to follow. She disciplined her students through love and kind words, and not by harshly punishing them. She was a golden "guru" for all.

She will always be remembered for her love for her family, friends and the many people who came in contact with her. As we give thanks to her memory, it is our hope that the younger generation will try their best to follow her noble values.

Our niece Ranjini Jeganathan's family will miss her kindness and the care she always gave them, especially after the two families re-joined again in New Zealand.

We extend our deepest sympathies to her immediate and extended families. She will always be remembered by us.

May Thavamani's soul be blessed in Heaven.

**Siva Suntharalingam**
**(U.S.A)**

"தூய்மையான கையும், பளிங்கு போன்ற உள்ளமுமே
சமூக சேவையாளரின் அணிகலன்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION
NSW and ACT (AUSTRALIA)
மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
சிட்னி (அவுஸ்திரேலியா)

# Apprieciation - Mrs.Thavamany Sundararajah

It is with great sadness we learnt of the passing away of our beloved teacher Mrs Thavamany Sundararajah in Auckland, New Zealand on -10 th August 2009.A number of old students of our Association had the opportunity to meet her and her husband in Sydney in 2006 for an informal lunch. This was a joyous occasion and we reminisced with her and husband the time they were teachers at Mahajana College. It also gave us the opportunity to show our sincere appreciation to her devotion to teaching of Botany to many generations of HSC students. Many of her students are now senior professionals in a wide range of fields making significant contributions to societies in Sri Lanka and in many countries throughout the world. They all will remember and appreciate the guidance, mentoring, knowledge and confidence she had provided them to succeed the difficult and challenging HSC years at school. We are eternally grateful to her for the significant contribution she has made to our lives and would like to records our deep appreciation for her dedication and services she had given to the school and the student community during her long tenure at our school.

Our heartfelt condolences and deepest sympathies to Mr.Sundararajah and children.

May her soul rest in peace.

**Tani Bakeerathan**
**President,**
**Mahajana College OSA NSW & ACT**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மனியில் இருந்து வெற்றிமணியின் அஞ்சலி!

திருமதி.சுந்தரராஜா அவர்கள் மகாஜனக்கல்லூரியில் கல்விகற்பித்த காலத்தில் நானும் மாணவனாக இருந்தவன். (1960-1970) ஒரு பெண் சிங்கத்தின் தோற்றம் அவரை எண்ணும் போது என் கண்முன்னே விரிகிறது. ஒரு ஆளுமைமிக்க பெண்ணா ஆசிரியையாக வலம் வந்தவர். இன்னும் சொல்லப்போனால் மாணவிகளின் மெய்ப்பாதுகாலர் என்று சொல்லலாம். அப்போது மாணவர்கள் அப்படித்தான் எண்ணிக் கொண்டனர். பழகப்பழகத்தான் அவர் மாணவ வர்க்கத்தின் மெய்ப்பாதுகாவலர் என உணர முடிந்தது.

மேலும் பாடசாலையில் இல்லங்களுக்கான ஓவியப் போட்டியில் கீழ்பிரிவு, மத்தியபிரிவு மேற்பிரிவு என அந்த அந்த வயதை எட்டியபோது எல்லாம் எனக்கு ஊக்கம் கொடுத்து முதலிடத்தைத் தக்கவைத்தவர். (நானும் ஆசிரியையும் அருளம்பலம் இல்லம்)

2007ம் ஆண்டு வெற்றிமணி வெளியீடாக வெளிவந்த திரு.பொ.கனகசபாபதி அவர்களின் (முன்னாள் அதிபர், மகாஜனக்கல்லூரி) திறவுகோல் நூல் நியூசிலாந்தில் வெளியிட்ட வேளையில் கலந்து சிறப்பித்து மகிழ்ந்தவர். இன்று அவர் மறைவு அறிந்து துயருறுகின்றோம்.

யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகை அவர் நினைவுகளை வெளியிட்டு அஞ்சலி செய்கின்றது.


மு.க.சு.சிவகுமாரன்
பிரதம ஆசிரியர் வெற்றிமணி
சிவத்தமிழ்
யேர்மனி

Vettimaniy
Dr.M.K.S.Sivakumaran.B.F.A
Brinker Hohe 13
58507 Ludenscheid
Gemany


உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

இல்வாழ்வான் என்பான் இயல்புடை மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appreciation - Baby Aunty

What I will remember about Baby aunty are her charisma, loving nature and happiness in the success and achievements of others. She was an unwavering tower of support to both myself and our family and was there to provide guidance, hope and help to all of us before we could even ask.

Now that she has moved on to a better place, I want to tell her this:

*When we could not crawl, you carried us*
*When we could not walk, you held our hands*
*When we could not run, you ran for us*
*When we could not rise, you lifted us*
*You will always be a shining light in our lives*

With your love and affection you kept all of us together for four generations. On behalf of our family, we humbly express our gratitude for the immense service you have rendered to us all and for the way you brightened our lives. Baby aunty, you are greatly missed, but your spirit will be remembered with love forever. May your soul rest in peace.

**Kumar**
**Canada.**

The hands that serve is more.
Powerful than the lips that pray.
- ***Bagawan Sri Sathya SaiBaba***

" A good life is the one inspired.
By love and guided by knowledge"
- ***Bertrand Russel***

His heart was as great as the world, but there was
no room in it to hold the memory of a wrong.
- ***Emerson***

Five things are requisite to a good officer – ability,
clean hands, despatch, patience and impartiality.
- ***William Pern***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களின் கவனத்திற்கு !

# "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

### புற்று நோய் பற்றி அறியப்பட்ட சில தகவல்கள் :

01. இது சில கலங்களின் (Malignant Cells) அசாதாரண வளர்ச்சிகள் அல்லது அதனால் ஏற்படும் கட்டிகளைக் குறிக்கும். ஆங்கிலத்தில் Cancer - நண்டு எனப்படும் இலத்தீன் சொல்லால் குறிப்பிடப்படும். ஒரு இடத்தில் தோன்றும் கட்டி மறு இடங்களுக்கும் நண்டின் கிளைகள் போன்று பரவும்.

02. இது தொற்று நோயல்ல, ஆனால் சில வகையான மார்புப்புற்று நோய், குடற்புற்று நோய், சில வகையான தைரோய்ட் புற்று நோய், சில வகையான குருதிப் புற்று நோய்கள் போன்றவை பரம்பரையாகவும் ஏற்படலாம்.

பரம்பரைப் புற்று உண்டாவதற்குரிய முக்கிய (Major Factor) காரணமாகக் கருதப்படுவது குறிப்பிட்ட 2 வகையான ஜீன்களில் (பரம்பரைக் காரணிகள்) ஏற்படும் சமநிலை மாற்றமே ஆகும்.

(Other Factors) - **வேறுகாரணிகள்**

03. இந் நோய் ஏற்படுவதற்கு (a) வாழ்க்கை முறையும் பழக்கவழக்கங்களும் (b) பரம்பரைக் காரணங்கள், (c) சிலருக்குக் காரணம் கூற முடியாத நிலையாகவும் இருக்கலாம்.

### வாழ்க்கை முறையும், பழக்க வழக்கங்களும் :

1. புகைப்பிடித்தல் : சுவாசப்பை, உதடு பாதிப்பு

2. சுண்ணாம்பு, சிகரெட், புகையிலை உபயோகித்தல் : வாய், தொண்டை பாதிப்பு

3. மது அருந்தல் : ஈரல், களம் பாதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சில வகை உணவுகளும், முறைகளும் - அதிகமான கொழுப்பு, காரம் (குடல், மார்புப்பாதிப்பு) மாமிச உணவுகள், தீயிலே வாட்டப்பட்டவை, ரோஸ்ற் செய்யப்பட்டவை, பாதுகாப்பிற்காக உப்பிடப்பட்டவை, புகையூட்டியவை, செயற்கை நிறமூட்டிகள், இரசாயன பொருட்கள் (Food Preservatives) சேர்க்கப்பட்டவை, தகரத்தில் அடைக்கப்பட்டவை, உலராத உணவுகளில் படரும் பூஞ்சணங்களால் உற்பத்தியாகும் நச்சுப் பதார்த்தம் போன்றன (குருதி, ஈரல், களம், இரப்பைப் பாதிப்பு)

5. உடைந்த பற்களின் நெடுநாளைய உறுத்தல்

6. பெண்கள் ஓமோன்களைப் பயன்படுத்தல்

7. சூரிய ஒளியின் புற ஊதாக்கதிர்கள் (Ultra-Violet-rays) (தோல், கண் பாதிப்பு)

8. உறவு முறைத் திருமணங்கள் போன்றவையும் காரணங்களாக அமையலாம்.

## நோயின் அறிகுறிகள் (Symptoms and Signs)

1. உடலில் யாதேனும் இடத்தில் கட்டி அல்லது தழும்பு ஏற்படல்
2. ஆறாத புண்கள்,
3. தொடர்ச்சியான இருமல்
4. மெலிதல்
5. பசியின்மை
6. உணவு விழுங்குவதில் சிரமம்
7. வாயில் புண்கள், வாய்க் குழியில் செந்நிற வெண்ணிறப்படலம், குரலில் மாற்றம்
8. **பெண்களில்:** அதிகமான உதிரப்போக்கு, வெள்ளைபடுதல், **மார்பகத்தில்** கட்டி காணப்படல்(Breast Cancer), பருமன் வேறுபாடு காணப்படல், ஒரு பக்கம் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பகம் சரிந்து காணப்படுதல், மார்பகத் தோல் தடித்திருத்தல், முலைக்காம்பு உள்ளிழுக் கப்பட்டிருத்தல் அல்லது அதன் வழியே ஒரு திரவப் பதார்த்தம் வெளியேறல் போன்றன.

## பாதுகாப்பும் சிகிச்சை முறையும் (Prevention, Treatment and options)

1. நார்த்தன்மையுடைய தாவர உணவுகள், கொழுப்புக்குறைந்த இயற்கை உணவுகள் பயன்படுத்தல்

2. 40 வயதின் பின் மருத்துவப் பரிசோதனை செய்தல்.

3. உடலில் கட்டிகள் அல்லது வளர்ச்சிகள் அல்லது மாற்றங்கள் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறல்.

4. பெண்கள் மாதமொரு தடவை தங்கள் மார்பகங்களைச் சுய பரிசோதனை செய்தல்

5. ஆரம்ப நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றல் அல்லது X-ray, கதிர் வீச்சு சிகிச்சை வழங்கி அவற்றை அழித்தல்.

6. சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் - வலி தவிர்க்கும் நிவாரணிகளும், குருதி மூலம் உடலுக்குச் சக்தியை அளிக்கக் கூடிய போசாக்குத் திரவங்களை வழங்கல்

7. வின் கிறிஸ்ரின் (Vincristin) வின் பிளாஸ்ரின் (Vinblastin) எனும் மருந்துகள் குருதிப்புற்று நோயிற்கு மிகச் சிறந்தவை.

   இம் மருந்து சந்தனி (Chandani) தாவரத் (Vinca-rosea) தில் இருந்து பிரித்து எடுக்கப்படும்.

8. இந் நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டால் முற்றாகக் குணப்படுத்தலாம்.

உன்னுடைய சுமையை நான் தாங்கிக்கொள்வேன். என்னிடமிருந்து எவ்வளவு ஆனந்தத்தை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் எடுத்துக் கொண்டு உன் துன்பங்களை எனக்கு விட்டுவிடு.

-பாபா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகவான் ஸ்ரீ சாயி பாபாவின் சத்திய வாக்குகள்

விசாலமான இதயமே உண்மையான ஆன்மீகம் அந்த உண்மையான ஆன்மீகத்தை அடைய விரும்புவோர் எல்லாச் செயலையும் இறைவனின் செயல்களாகவே எண்ணிச் செயல்பட வேண்டும்.

எந்தச் செயலை நீ புரிந்தாலும் எத்தகைய கல்வியை நீ கற்றாலும் எத்தகைய தான தர்மங்கள் நீ செய்தாலும் இதற்கெல்லாம் அடிப்படை சித்த சுத்தியும் தியாகமுமே.

எவ்வாறு கடலினின்று வெளிவரும் அலைகளுக்கும் கடலுக்கும் இடையில் வருணிக்க இயலாத இயல்பான பிரிக்க முடியாத தொடர்பு உள்ளதோ, அதேபோல இறைவனிடமிருந்து வெளிவரும் பிரேமைக்கும், இறைவனுக்கும் இடையில் வருணிக்க இயலாத, இயல்பான பிரிக்க முடியாத தொடர்புள்ளது.

மனிதனின் வாக்கு ருக்வேதம், மனது யஜுர் வேதம், பிராண சக்தி சாமவேதம் இவை மூன்றின் ஒருங்கிணைப்பே ஆத்ம தத்துவம். ஆகவே ருக், யஜுர், சாமவேதங்களும் மனிதத் தன்மையின் ஸ்வரூபங்களே.

நல்லதையே நினை: நல்லதையே பார்: நல்லதையே செய். இதுவே பிரம்மத்துவத்தின் இரகசியம். பக்தியின் இலட்சணம்.

வேண்டுவோரின் உள்ளம் எப்படியோ அப்படியே கடவுளின் அருளும். இறைவனைத் தூய்மையாக வழிபட்டால் தூய்மையான அருளும், தீய உள்ளத்துடன் வழிபட்டால் தீய விளைவுகளுமே கிட்டும்.

பக்தியுள்ளவனை நாடி இறைவன் வருகிறார். அவர் பார்ப்பது இதயமே தவிர வெளி அந்தஸ்தல்ல.

சாந்தி, சத்யம், தர்மம், பிரேமை இவை நான்குமே சனாதன தர்மம் என்னும் மாளிகையின் அடித்தளமும் சுவர்களுமாகும். இவை இல்லையேல் நீ என்ன கல்வி கற்றாலும் என்ன வேலை செய்தாலும் அவை அனைத்தும் பூஜ்யமே.


தெய்வத்தின் நாமத்தை நெஞ்சில் இருத்தி, வாயினால் உச்சரித்து தெய்வார்ப்பணமாகப் பணிகளைச் செய்து எப்போதும் தெய்வ சிந்தனையிலிருந்து நழுவாமலிருந்தால் கட்டாயம் உனக்குத் தெய்வ அருள் கிட்டும்.

உங்கள் முன் ஒளி வீசும் மின் விளக்கில் அதன் ஒளியே பிரேமை, மின்விளக்குத்தான் சாந்தி, மின் சக்தியைப் பரப்பும் கம்பியே தர்மம், மின் சக்தியே சத்யம். ஆகவே சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை இவைகளின் இணைப்பே ஒளியைத் தரக்காரணமாகிறது.

-பகவான் பாபா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதய நன்றிகள்

''பணியின் விதிவழியே விண்புக்கார்''


பல குடும்ப ஒளியாய் இருந்து, எல்லோர் மனதிலும் இடம் பிடித்த சுடரானது அணைந்தது என்ற செய்தி கேட்டும், நோய்வாய்ப்பட்டிருந்த போதும், நேரில் வருகை தந்து துயரில் பங்கு கொண்டும், மலர் வளையங்கள், மாலைகள் சமர்ப்பித்து அஞ்சலி செலுத்தியும், தேவாரம், திருப்பதிகங்கள் பாடியும், இறுதி நிகழ்வில் கலந்து அனுதாப உரைகள் ஆற்றியும், அமரரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து சிறப்பித்தும், வெளியிடங்களிலிருந்து தொலைபேசி, தொலைநகல், தந்தி, மின்னஞ்சல் மூலம் ஆறுதல் அளித்தும், சபிண்டீகரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதிய போசனை ஆகியவற்றில் கலந்தும், உதவிகள் புரிந்தும், சகல வழிகளிலும் உறுதுணையாக உதவிய உற்றார், உறவினர், அயலார் ஆகியோருக்கும், ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில் பிரதம சிவாச்சாரியார், ஸ்ரீ துர்க்காதேவி தேஸ்தானத்தலைவர், நண்பர்கள், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா), மகாஜனக் கல்லூரி அதிபர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நோய்வாய்ப்பட்டிருந்த போது உதவிய வைத்தியசாலை வைத்தியர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கும், இத் தவஜோதி நினைவுச் சுடருக்கு அனுதாபக் கட்டுரைகளையும், சிறப்பான தகவல்களையும் வழங்கி உதவிய பெரியோருக்கும், மேலும் உரிய காலத்தில் அம்மலரினை அழகுற வடிவமைத்து அச்சிட்டு உதவிய "Fast Printers" அச்சகத்தாருக்கும், மற்றும் வேறு பல வழிகளில் பங்களிப்புச் செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் இதயபூர்வமான அன்பு கலந்த என்றும் மறவாத நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அவருடைய ஆத்மா இந்நாளில் சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!**

**ஓம் சாந்தி!**

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் குடும்ப அங்கத்தவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ACKNOWLEDGEMENT

We acknowledge with gratitude :

The Members of our family and we express our sincere thanks to the Chief Priest of Sri Naguleswara Swamy Temple, President of Sri Durgadevi Devasthanam, Old Students' Association of Mahajana College(Newzealand, Canada, Australia), Principals, past students and Staff of Mahajana College, relatives, friends and all other associates, those who have sent floral tributes, messages of condolence, rendered devotional songs, delivered funeral orations have touched us deeply and soothed our aching hearts and also who have paid their last respects and homage and helped generously in numerous ways in our hour of grief and sorrow on the demise of our dearest "Baby Acca."

We also thank the staff of "ELIZABETH KNOX HOME AND HOSPITAL " who bestowed great love and understanding which helped her to be contented throughout her illness.

We also thank all who have participated in the "ANTHIYESHTI" Ceremony.

Further we wish to express our sincere thanks to the staff of "FAST PRINTERS" for designing this memorial souvenir within the short period.

We regret our inability to thank everyone individually.

**May her soul rest in peace**

**Aum Shanthi**

**Husband, Children,**

**In-laws, Grand children and all other family members.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Tree


- Murugesapillai ◡ + Sithamparam ◡
  - **Thavamany ◡ + Sundararajah** (Sundararajah is a son of Nagalingam + Rasamma)
    - **Renuga + Srikumar**
      - **Gajan**
      - **Bhavan**
    - **Mrurganujan + Anushya**
      - **Myilan**
      - **Shantala**
  - Navamany + Gnanalingam
    - Kandeepan + Sudha
      - Ashwin
      - Shwetha
    - Kogulan + Kumuthiny
  - Poomany + Thuraisingam
    - Bhamini + Satish
      - Tavina
      - Anisha
    - Rathini + varathan
      - Anita
      - Aran
  - Ganesan + Chandrarathy ◡
    - Arjun + Tanya
      - Farrah
    - Deelipan
  - Thembamalar + Kirupakaran
    - Thurkadas
    - Suganya + Paraneetharan
      - Thavesh
      - Thiviyan
  - Mahesan + Sugunakumari
    - Arvind
    - Easwar
  - Nadesan + Selvanayaky
  - Ranimalar + Kandasamy
  - Jegatheesan ◡ + Luxmikantha
  - Kugatheesan + Sivagamy
    - Praveena
    - Prashanth

- Nagalingam ◡ + Rasamma ◡
  - **Sundararajah** (+ **Thavamany ◡**, see above)
  - Nadarajah ◡ + Maheswary ◡
    - Ganesharatnam + Krishnathevi
    - Sountharanayaki + Sivanadiyan
      - Ahilan + Prasanthi
        - Abhinash
      - Kabilan + Luxmi
      - Janani
    - Sivayoganayaki + Selvakumar
      - Geetha
    - Sivanantharatnam + Kamala
      - Kumaran
    - Sarojinidevi + Elangeswaralingam
      - Lakshmanan
  - Sivarajah ◡ + Nagamalar ◡
    - Rasathurai ◡
    - Balasubramaniam + Umathevi
  - Paramarajah ◡ + Sivagnanavathiyar ◡
    - Selvarani + Sivaneswaran ◡
      - Sivatharshani + Sathiyaraj
        - Abivarathan
      - Sivagowmini
    - Thavarani + Sivalingam
    - Kugarajan + Vasantha
      - Raathigeshan
      - Shanathani
  - Paththini Ambihai ◡ + Kumarasamy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளைகளின் குடும்பத்தினருடன்



பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்





எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

~ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fast Printers : 269-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.